
# திருக்கோயில்



ஆகஸ்ட்
2000

விலை
ரூபாய் ஐந்து





திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் 9.7.2000 அன்று ''பன்னிரு திருமுறைக் கருத்தரங்கம்'' இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி இணை ஆணையாளர் திருமிகு இளங்கோ அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன், முனைவர் மா. வண்ணமுத்து, பைம்பொழில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், திருக்கோயில் ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், கலைமாமணி அருளரசு மாசிலாமணி உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பலர் இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு வே. துரைசாமி அவர்களும், அறங்காவலர் குழுத் தலைவர் திருமிகு நம்பி அவர்களும் கருத்தரங்கம் சிறப்பாக நடப்பதற்கு ஆவன செய்திருந்தனர்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 42 | திருவள்ளுவர் ஆண்டு 2031 ஆகஸ்டு 2000 | விக்ரம ஆண்டு ஆடி | மணி 8 |
|---|---|---|---|



சிறப்பாசிரியர்

**திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.**

ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**

எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


*முகப்பு*

திருநெல்வேலி

அருள்மிகு காந்திமதியம்மன்

## *பொருளடக்கம்*


**திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் நடைபெற்ற பன்னிரு திருமுறைக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்கள் காரைக்கால் அம்மையாரின் ''இவரைப் பொருள் உணரமாட்டாதார்'' என்ற பாடலுக்கு ஆற்றிய விளக்கவுரை**

**'மதிமலிபுரிசை மாடக்கூடல்''**
- பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன்

**மகாமாரியம்மன் வரலாறு**
- டாக்டர் இரா. செல்வகணபதி

**வாசகர் எண்ணங்கள்**

**மாரியம்மனை பணி மனமே - கவிஞர் ஆற்றலரசு**

**நைவேத்தியம் பிரசாதம் - டாக்டர் டி. செல்வராஜ்**

**பெரியாழ்வார் - எம். சிவப்பிரகாசம்**

**சனீஸ்வரன் - திருமதி மீனாட்சி கோகுலவாசன்**

**சனீஸ்வரன் 108 போற்றி**

**வினாவும் விளக்கமும்**
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன், எம்.ஏ., டி.லிட்., பி.எச்.டி.,



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் 9.7.2000 அன்று நடைபெற்ற ''பன்னிரு திருமுறை''க் கருத்தரங்கில் கலந்து கொண்டு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்கள் காரைக்கால் அம்மையாரின் ''இவரைப் பொருள் உணர மாட்டாதார்'' என்ற பாடலுக்கு ஆற்றிய விளக்கவுரை




காரைக்கால் அம்மையார் திருவடிகளே சரணம்.

அனைவருக்கும் வணக்கம்.

நான் விளக்கவுரை ஆற்ற தேர்ந்தெடுத்த பாடல் இறைவனால் ''அம்மை'' என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட காரைக்கால் அம்மையார் இயற்றிய ''அற்புதத் திருவந்தாதி''யில் 29 ஆவது பாடலாக வரும் இந்தப் பாடல் தான்; பாடலைச் சொல்லி அதற்குப் பிறகு விளக்கம் சொல்லலாம் என்று இருக்கின்றேன்.

> ''இவரைப் பொருள்உணர மாட்டாதார் எல்லாம்
> இவரை இகழ்வதே கண்டீர் - இவர் தமது
> பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
> பேய்க்கோலம் கண்டார் பிறர்''

இந்தப் பாடல் காரைக்கால் அம்மையார் பேய் வடிவம் பெற்ற உடன் பாடியதாகச் சொல்லப்படுகின்றது.

காரைக்கால் அம்மையார் பேய்க்கோலம் பெற்றது, இறைவன் அவருக்கு மாங்கனி தந்ததனாலே. முருகன் ஆண்டிக்கோலம் ஏற்றார், அவருக்கு மாங்கனி கிடைக்காததனாலே. மாங்கனி இறைவனிடமும், இறை அடியார்களிடமும் அரிய ஒரு பங்கினை வகிக்கிறது என்று கருதும்பொழுது அந்தக் கனிக்கு இயல்பாக உள்ள சிறப்புப் போக, ஆன்மீகத்திலும் ஒரு சிறப்பு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

''இவரைப் பொருள் உணரமாட்டாதார் எல்லாம்'' என்று இறைவனைப் பற்றி அறியாதவர்கள் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிற பொழுது, இந்தப் பாட்டிற்கே பொருள் உணர முடியவில்லை. என்னுடைய தகுதியை நம்பாமல், என்னுடைய ஆர்வத்தை மட்டுமே நம்பி இந்தப் பாட்டிற்குப் பொருள் கூற நான் முயற்சிக்கின்றேன்.

தண்ணீரிலே பிழுக்கை விழுந்தால் தண்ணீரைக்

கொட்டி விடுவார்கள். பாலிலே பிழுக்கை விழுந்தால் பிழுக்கை நீக்கிப் பாலை ஏற்றுக் கொள்வார்கள். அதைப் போல என்னுடைய பேச்சிலே குறை இருந்தால் அதை நீக்கி, நிறை இருந்தால் அதை மட்டும் ஏற்றுக் கொண்டு, பிழுக்கை நீக்கிப் பிழை பொறுத்தருள வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

காரைக்கால் அம்மையார் பாடிய இந்த ''அற்புதத் திருவந்தாதி'' வெண்பா யாப்பிலும், அந்தாதித் தொடையிலும் அமைந்து விளங்குகின்றது. இந்தப் பாடலுக்குப் பொருள் தெரிய வேண்டும் என்றால், இந்தப் பாடலுக்கு முன்னாலும், பின்னாலும் உள்ள பாடல்களை நாம் அறிய வேண்டி இருக்கின்றது.

இப்பாடலில் காரைக்கால் அம்மையார் ''இவரை'' என்று சிவபெருமானையே குறிப்பிட்டுச் சொல்லுகின்றார். ''இவரைப் பொருள் உணர மாட்டாதார் எல்லாம்'' என்றால் காரைக்கால் அம்மையார் எதனைக் குறிப்பிடுகின்றார்?

இவருடைய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலைத் தெரியாதவர்கள், இவர் அநாதி என்று தெரியாதவர்கள், இவர் தன்வயத்தன் என்று தெரியாதவர்கள், இவர் உயிர்களைப் படைக்கவில்லை என்று தெரியாதவர்கள், உயிர்களுக்கு உடலை மட்டுமே அந்தக்கரணங்களுடன் கொடுப்பவர் என்று தெரியாதவர்கள், மக்களில் நல்லவர்கள் துன்புற்றிருப்பதுவும், தீயவர்கள் இன்புற்றிருப்பதுவும், இதற்கெல்லாம் இவர் காரணம் இல்லை என்று தெரியாதவர்கள், இவருடைய அறக்கருணையைத் தெரியாதவர்கள், இவருடைய மறக்கருணையைத் தெரியாதவர்கள், இவர்கள் எல்லாம்தான் ''இவரைப் பொருள் உணரமாட்டாதவர்கள்'' என்று காரைக்கால் அம்மையார் இப்பாடலில் சொல்லுவதாக நான் நினைக்கின்றேன்.

இப்படி எத்தனை பேருக்குப் பொருள் தெரியாது இவரைப் பற்றி? இறைவனுடைய தன்மை, இறைவனுடைய தத்துவம், இறைவனுடைய கல்யாண குணங்கள், இறைவனுடைய அருளும் மாட்சி - இவற்றை எல்லாம் அறியாதவர்கள் சிலர்தானா? பலருக்கு இவை தெரியாதது மட்டும் அல்ல, இறைவன் செயலைத் தெரிந்து கொள்வது முடியாத ஒரு செயலாகவே இருக்கின்றது. அதனாலேதான் சிவஞான சித்தியாரில், அருள்நந்தி சிவாச்சாரியார் சொல்லுகின்றார்.

''சிவன் சக்திதனை ஈன்றும்
சக்திதான் சிவத்தை ஈன்றும்
உவந் திருவரும் புணர்ந்திங்கு
உலகுயிரெல்லாம் ஈன்றும்
பவன் பிரம்மசாரியாகும்
பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத்தோர்க்குத்
தன்மைதான் தெரியும் அன்றே''

என்கின்றார்.

சிவன் சக்தியைப் பெற்றுப் பிறகு சக்தி சிவனை ஈன்று, இருவரும் சேர்ந்து உலக உயிரை எல்லாம் ஈன்றார்களாம், அப்படியே இருந்தாலும் அதற்குப் பிறகு இவர் எப்படி பிரம்மசாரியாக இருக்க முடியும்? இவள் எப்படி பால்மொழிக் கன்னியாக இருக்க முடியும் என்று ஒரு முரண்பாடு, ஒரு குழப்பம் நமக்கு ஏற்படுகின்றது. மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் இப்படி ஏற்படுகின்றது. உண்மையாக இதைக் குழப்பம் என்று சொல்வதைவிட நுணுக்கம் என்று சொல்லலாம். இந்த நுணுக்கம் எப்படி யாருக்குத் தெரியும் என்று சொல்லுகிறார் என்றால் ''தவந்தரு ஞானத்தோர்க்குத் தன்மைதான் தெரியும்'' என்று சொல்லுகின்றார்.


அதாவது, புத்தக அறிவினாலே நாம் இதைத் தெரிந்து கொள்ள முடியாது. பட்டறிவினாலே நாம் இதைத் தெரிந்து கொள்ள முடியாது. தவத்தினாலே பெற்ற ஞானத்தை உடையவர்கள் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும் என்ற வகையிலே இதைச் சொல்லுகின்றார் அருள் நந்தி சிவாச்சாரியார்.

இந்தக் காரணத்தினாலேதான் திருஞானசம்பந்தரும் நமக்கொரு கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுகின்றார்.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே''

என்கின்றார்.

அதாவது உவமான, உவமேயம், உதாரணம், எடுத்துக்காட்டு இவைகளை எல்லாம் சொல்லி இறைவன் இருக்கின்றானா, இல்லையா என்பதை நீ அதிகம் சோதிக்க வேண்டாம். நீ இந்த உலகத் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்றால், ஒரு குருவை நாடு, இவர் சொல்வதைக் கேட்டு இந்தத் துன்பத்திலிருந்து நீ விலக வேண்டும், இறைவன் ஜோதிப் பிழம்பாக இருக்கின்றான் என்று திருஞானசம்பந்தர் சொல்லுகின்றார். அதனாலே நாமே முயற்சி செய்து, நாமே இவருடைய பொருளை அறிவது கடினம் என்ற காரணத்தாலே அவர் இப்படி எல்லாம் சொல்லிவைத்துச் சென்றிருக்கிறார். இந்தப் பொருளைத்தான் காரைக்கால் அம்மையார் பாடியுள்ள இந்தப் பாடலின் முதல் வரிக்கு உள்ள உண்மைப் பொருளாக நான் நினைக்கின்றேன்.



காரைக்கால் அம்மையார், ''இவரைப் பொருள் உணரமாட்டாதார்'' என்ற பாடலின் முதல் இரண்டு அடிகளை மெய்யறிவு இல்லாதவர்களுக்குப் பொருத்த மாகவும், அடுத்த இரண்டு அடிகளை மெய்யறிவு உற்ற ஞானியர்களுக்குப் பொருத்தமாகவும் சொல்லிச் சென்றிருக்கின்றார்.

அடுத்து ''இவரை இகழ்வதே கண்டீர்'' என்று சொல்கிறார். இவரைப் பற்றித் தெரியாதவர்கள் எல்லாம் இவரை இகழ்ச்சியாகப் பேசுவார்களாம். முதலாவதாக இவரை இல்லை என்று சொல்பவர்களும் உண்டு. அதனால் தான் மாணிக்கவர்சகர் ''நாத்திகம் பேசி நாத் தழும்பு ஏறினர்'' என்கின்றார். ''இவரை இகழ்வதே கண்டீர்'' என்ற வரியில் இறைவனை இகழவில்லை. இறைவன் இல்லை என்று சொல்கிறவர்களைச் சாடு கின்றார். நாத்திகம் பேசுகிறவர்களுக்கு நாத்தழும்பு இருக்கின்றது என்று மணிவாசகர் கூறியதைப் போல இறைவனைப் பற்றிய உண்மையைத் தெரியாதவர்கள், இறைவன் இருப்பதை உணராதவர்கள், பிறர் சொல்லக் கேட்காதவர்கள், கேட்கமாட்டாதவர்களைப் பழிக்கும் வகையில் காரைக்கால் அம்மையார் ''இவரை இகழ் வதே கண்டீர்'' என்று பாடியிருப்பதாக நான் உணரு கின்றேன்.

மகாகவி பாரதியார் கூட என்ன கூறியுள்ளார்? ''தனி ஒருவனுக்கு உணவில்லை எனில், ஜெகத் தினை அழித்திடுவோம்'' என்று கூறியிருக்கின்றார். அதாவது மூலப் பிரகிருதியிலிருந்து இந்தப் பஞ்சபூதங் களை - இந்த பிரபஞ்சத்தைப் படைத்த இறைவன் செய்ய வேண்டிய அழித்தல் வேலையை பாரதியார் தானே அழித்து விடுவேன் என்று சொல்லியிருப்பதைக் காணு கின்றோம்.

வள்ளுவரும் கூட இப்படி பாடியிருக்கக் காணலாம்.

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

அதாவது யாசித்துத் தான் ஒருவன் வாழ வேண் டும் என்றொரு நியதி இருந்தால் அப்படிப்பட்ட உல கியற்றியவன் கெட்டு நாசமாகப் போகட்டும் என்று வள்ளுவரும் பாடியிருக்கக் காணுகின்றோம். இதே போன்று புறநூனூற்றிலே பக்குடுக்கை நன்கணியார் என்றொரு புலவர் பாடியிருக்கின்றார். இவர் தெருவிலே போய்க் கொண்டிருந்தபொழுது ஒரு பக்கத்திலே மங்கல வொலியைக் கேட்கின்றார். இன்னொரு பக்கத்திலே அமங்கலவொலியைக் கேட்கின்றார். ஒரு பக்கத்தில் காதலருடன் கூடிக் களித்து மகிழ்ச்சியில் இருக்கும் மங்கையர் கூட்டத்தைப் பார்க்கின்றார். இன்னொரு பக்கத்தில் கணவனை இழந்து தந்தி அறுந்த வீணை போன்று, சிறகொடிந்த பறவை போன்று, கோரிக்கை யற்றுக் கிடக்கின்ற வேரில் பழுத்த பலா போன்று தவித்துக் கொண்டிருக்கின்ற மங்கையர் கூட்டத்தைப் பார்க்கின்றார்.

என்னடா உலகம்? இவ்வளவு துன்பத்தைக் கொடுக்க வேண்டுமா படைத்தவன்? என்று எண்ணு கிறார். அதே நேரத்தில் இதிலிருந்து விடுபடுவதற்கு முத்திப்பேற்றிற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்றார்.

அந்தப் பாடலை இரண்டு நாட்களுக்கு முன்தான் நான் பார்க்க முடிந்த காரணத்தினாலே அப்பாடலை மனனம் செய்ய இயலவில்லை. ஆகவே அப்பாடலை நான் வாசிக்கின்றேன்.

''ஓரில் நெய்தல் கறங்க, ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்
இன்னா தம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே''

படைத்தவனைப் ''பண்பிலாளன்'' என்று சொல்லுகின்றார். அதன்பின்

''இன்னாதம்ம இவ்வுலகம்,
இனிய காண்க இதன்இயல் புணர்ந்தோரே''

என்று கூறி முடிக்கின்றார்.

நான் சொன்ன பாரதியாரோ, வள்ளுவரோ, இந்தப் பக்குடுக்கை நன்கணியாரோ பாடியுள்ள இந்தப் பாடல்களை வைத்துக் கொண்டு, அவர்கள் இறைவனை இகழ்ந்துள்ளார்கள் என்று நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஏனென்றால் அவர்கள் எல்லாம் அருளாளர்கள், ஜீவகாருண்ய ஒழுக்கச் சீலர்கள், உயிர்களின்பால் உள்ள கருணையினாலே, பிறர் துன்பப்படுவதை அவர்கள் பொறுத்துக்கொள்ள முடியாத காரணத்தினாலே இப்படி சொற்களைப் பிரயோகம் பண்ணியிருக்கிறார்கள் என்றுதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் சாதாரணமானவர்கள் என்ன நினைப்பார்கள்? கல் என்பார்கள், கல் நெஞ்சன் என்பார்கள், இன்னும் என்ன சொல்வார்கள்? கோயிலிலே சிலை திருட்டு போகின்றது, அதைக்கூட தடுக்க இயலாதவன் என்று சொல்லுவார்கள். கோயிலிலே உண்டியல் பணம் திருட்டு போகின்றது, அதையும் தடுக்க இயலாதவன் என்று சொல்லுவார்கள். கோயில் சொத்து அபகரிக்கப் படுகின்றது, அதைத் தடுக்க இயலாதவன் என்றெல்லாம் சொல்லுவார்கள். தான் துன்பப்படும் பொழுது இறைவனைக் 'கொடுங்கோலன்' என்று சொல்வார்கள். அவரை நீதிமான் என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இப்படி எல்லாம் இறைவனுடைய உண்மைத் தன்மையைப் பற்றிப் பூர்வசென்ம வினையைப் பற்றி - அதனாலே நாம் படுகின்ற இன்பமோ, துன்பமோ அதைப் பற்றி எல்லாம் தெரியாத காரணத்தினாலே இறைவனை சாதாரண மக்கள் தான் இகழ்வார்கள் என்ற பொருளிலே காரைக்கால் அம்மையார் ''இவரை இகழ்வதே கண்டீர்'' எனப் பாடியிருத்தலைக் காணுகின்றோம்.

அடுத்துக் காரைக்கால் அம்மையார் ''பூக்கோல மேனி பொடிபூசி'' என்கின்றார். இந்த சிவபெருமானுடைய உடல் எப்படி இருக்கிறது? தாமரை போன்ற நிறம், ''செம்மேனியன்'' என்றெல்லாம் சொல்லுகின்றார்கள். ''பொன்னார் மேனியனே'' என்று சொல்லுகின்றார்கள். ''தீ நிற வண்ணன்'' என்றும் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்ட நிறத்தை உடைய அவர் ''பொடிபூசி'' இருக்கின்றாராம். அவர் பூசுகின்ற பொடி வாசனைத் திரவியம் அல்ல. சுடுகாட்டிலே கிடைக்கின்ற சாம்பலை எடுத்து அவர் பூசிக் கொள்ளுகின்றார். இது எப்படி நாம் அறிகின்றோம்.

திருஞானசம்பந்தர் தம்முடைய முதற் பாடலிலே ''தோடுடைய செவியன் விடையேறி தூவெண் மதி சூடி காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளம் கவர் கள்வன்'' என்று கூறுகின்றார். அவருக்கு இறைவன் பார்வதி சமேதராகக் காட்சி அளித்தால் கூட பொடிபூசி இருப்பதாகத் தெரிகின்றது. அப்பர் ஓரிடத்திலே ''பொன்னிறமொத்த மேனியில் பொடிபூசக் கண்டேன்'' என்கின்றார். இப்படி அவர் தன்னுடைய மேனியிலே பொடிபூசி இருக்கின்றார். எதற்காக அவர் அப்படி ஒரு கோலத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்?

சிவபெருமான் சங்காரக் கடவுள். ஆதலால் அவர் அந்தக் கோலத்தை மேற்கொண்டிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். எலும்பை மாலையாக - மண்டை ஓட்டை மாலையாகத் தரித்துக் கபாலியாக அவர்காட்சியளிக்கின்றார். ஊழிக்காலத்திலே - உகாந்த காலத்திலே - பிரளய காலத்திலே அவர் பேய்களுடன் நடனமாடுகின்றார் என்று சொல்லப்படுகின்றது. பேய்களுடன் நடனமாடும் சிவபெருமான், பேய்க்கோலத்திலே அப்பொழுது தோன்றுகிறார் என்று சொல்லப் படுகின்றது.

ஊழிக்காலத்திலே அவர் தோன்றுகின்ற இந்தப் பேய்க்கோலக் காட்சியைத்தான் மற்றைய காலங்களிலும் அருளாளர்கள் பார்த்திருக்கிறார்கள். அதைப் போன்று வெவ்வேறு கோலங்களையும் பார்த்திருக்கிறார்கள். ''கணக்கில்லாத திருக்கோலம் நீ காட்டினாய் வந்து கழுக்குன்றிலே'' என்று சொல்லுகின்றார் மாணிக்கவாசகர். அவர் வெவ்வேறு கோலங்களிலே இறைவனைப் பார்த்திருக்கின்றார்.

இந்தக் கோலங்களைச் சொரூபலட்சணம் என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? இதுதான் இறைவரின் இயல்பான கோலமா? அப்படி என்றால் மற்ற சமயத்தினர் கூறுவது எல்லாம் பொய்யா? வைகுண்டத்திலே அவர் நாராயணனாக இருக்கின்றார் என்று வைணவர்கள் சொன்னால் அது பொய்யா? இன்னும்

பலர் பரமண்டலத்தில் பரமபிதாவாக இருக்கிறார்; பிறர் எல்லாம் வல்ல அல்லா என்று சொல்லுகிறார்கள்; அவர்கள் சொல்லுவதும் கூட பொய்யல்ல. அருளாளர் தள் கண்டதெல்லாம் தடத்த லட்சணங்களைத்தான், இறைவனுடைய இயல்பான தோற்றத்தைப் பார்க்க முடியாமல் அவர் வெவ்வேறு சூழலிலே, வெவ்வேறு காலக்கட்டங்களிலே வெவ்வேறு அருளாளர்களுக்குக் காட்டிய கோலங்களைத்தான் அவர்கள் கூறியிருக் கிறார்கள்.

யாரும் இறைவனுடைய சொரூபலட்சணத்தை - இயல்பான லட்சணத்தை - உண்மை லட்சணத்தைக் காணவில்லை என்று தான் தெரிகிறது. காரைக்கால் அம்மையாரே ஓரிடத்தில் சொல்லுகின்றார்.

''அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்கு
என்னுரைப்பேன்
எவ்வுருவோ நின் உருவம், ஏது?''

என்கின்றார். நான் உன்னுடைய உருவத்தைக் காணா மலே உனக்கு நான் ஆட்பட்டு விட்டேன். இன்றைக் கும் உன்னுடைய உருவம் தெரியாது: மற்றவர்கள் எல்லாம் உன்னுடைய உருவம் என்ன என்று கேட் கிறார்கள். உன் உருவம் என்ன என்று நீயே சொல்லி விடப்பா என்று கேட்கின்றார் நம் காரைக்கால் அம்மை யார்.

ஆகவே இறைவனுடைய சொரூபலட்சணத் தைப் பார்த்தவர்கள் யாரும் இல்லை. பலரும் தடத்த லட்சணத்தைத்தான் பார்த்திருக்கிறார்கள். அப்பருக்குக் கட்டமுது கொடுத்தபொழுது இறைவன் வயோதிக னாக வந்தது, சுந்தரரை ஆட்கொள்ள வந்தபொழுது இறைவன் வேதியனாக வந்தது, இப்படி பல்வேறு உருவங்களை நிலவுலகிலே பார்த்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இறைவனின் பல்வேறு கோலங் களைக் காணாதவர்கள், இவரைப் பற்றித் தெரியாத வர்கள் - இறைவனை இகழ்ந்துரைப்பார்கள். ஆனால் இறைவனின் பல்வேறு கோலங்களை - தடத்த லட்ச ணங்களைக் கண்டவர்கள் - பேய்க் கோலத்தைக் கண்ட வர்கள் இறைவனைப் புகழ்ந்துரைப்பார்கள் என் கிறார் காரைக்கால் அம்மையார். ''பேய்க் கோலம் கண்டார் பிறர்'' என்ற தொடரில் பிறர் என்பது பேய்க் கோலம் கண்ட அருளாளர்களைக் குறிக்கின்றது. சங்கார காலத்திலே இவர் ஏன் பேய்க்கோலம் கொள்ள வேண் டும்? சங்கார காலத்திலே, ஊழிக் காலத்திலே இவர் அசேதனப் பொருள்களை எல்லாம் சேதப்படுத்தி அழித்து விடுவாரா? சேதனப் பொருள்களாகிய உயிர்ப் பொருள்களை எல்லாம் கொலை செய்து விடுவாரா? அப்படித்தான் அவருடைய சங்காரம் - ஊழிக்காலம் இருக்குமா என்றால் அது கிடையாது.

ஒரு பள்ளிக்கு இரண்டு மாதம் விடுமுறை என்றால் எப்படி மாணவர்கள் மகிழ்ச்சி அடைகிறார் கள்? அலுவலகத்திற்கு ஒருவாரம் விடுமுறை என்றால் அலுவலர்கள் எப்படி மகிழ்ச்சி அடைகிறார்கள்? அது போன்று அவருடைய சங்காரம் பிராரத்த கன்மத்தி னுடைய வலிமையைத் தாங்க முடியாமல் உயிர்கள் இருக்கும்பொழுது - சங்கார காலம் வருகின்றது. இறைவன் மூலப்பிரகிருதியிலிருந்து தோற்றுவித்த இந்தப் பிரபஞ்சத்திற்கு உயிர்கள் சிறிது காலம் ஓய் வெடுப்பதற்காக சங்காரம் வருகின்றது. எப்படி சிலந்தி தன்னுடைய உடலிலிருந்து வலையைப் பிறப்பித்து, எப்படி மறுபடியும் தன்னுடைய உடலுக்குள்ளேயே அதைச் சேர்த்துக் கொள்ளுமோ, அதைப் போன்று இறைவன் சங்காரத்தை நிகழ்த்துகிறார். அப்பொழுது பேய்க் கோலத்திலே காட்சி அளிக்கின்றார். இப்படித் தான் அருளாளர்கள் - மெய்யறிவு உள்ளவர்கள் பேய்க் கோலமாக இறைவனைக் கண்டார்கள், மெய்யறிவு இல்லாதவர்கள், மற்றவர்கள் எல்லாம் அவரை அறிந்து கொள்ளாமல் இகழ்வதாகக் காரைக்கால் அம்மையார் கூறுகின்றார்.

காரைக்கால் அம்மையாருடைய ''இவரைப் பொருள் உணர மாட்டாதார் எல்லாம்'' என்ற இந்தப் பாடலிலே இருந்து நமக்கு நினைவூட்டப்படுவது என்னவென்றால் இறைவன் தூய்மையானவன், கருணைக் கடல், அவனை நாம் அடைய வேண்டும் என்றால் நாம் ஆத்மசாதனம் செய்ய வேண்டும். அதற் குரிய முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அதற்கான உறுதியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் செய்தியைத்தான் நமக்கு இப்பாடலின் மூலம் நமக்கு நினைவூட்டுகின்றார் என்று நான் எனக்குப் பட்டதை உங்களுக்குச் சொல்ல விழைகின்றேன்.

இப்படி அருமையான கருத்துகளை, அருமை யான செய்திகளை பன்னிரு திருமுறைகளில் இரு பத்தேழு அருளாளர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அருமையான பன்னிரு திருமுறைக் கருத்தரங்கிலே எனக்கு வாய்ப்பளித்த - அல்லது வாய்ப்பை நானே ஏற்படுத்திக் கொண்ட வாய்ப்பினுக் காக நன்றி கூறி, இதுகாறும் அமைதியாக இருந்து மிக உன்னிப்பாக என்னுடைய பேச்சைக் கேட்டுக் கொண் டிருந்தீர்களே! - அதற்கு உங்களுக்கெல்லாம் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

★ ★ ★

# "மதிமலிபுரிசை மாடக்கூடல்"

- பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன்

(பன்னிரு திருமுறைக் கருத்தரங்கில் ஆற்றப்பட்ட விளக்கவுரையாகும் இது)

தமிழ் இலக்கியத்தைச் செழுமைப்படுத்த காலங்கள் தோறும் சங்கங்கள் இருந்தன என்பது வரலாற்று உண்மை.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் முதல் சங்கம் தோன்றியது. இதன் தலைவராக திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் விளங்கினார்.

தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராக விளங்கிய விரிசடைக்கடவுள் தமிழ்ப் புலவர்களை வறுமையில் இருந்து விடுவித்து நல்வாழ்வுகாட்டி நல்வாழ்வும் வழங்கினார் என்பது தமிழ் இலக்கிய உலகச் செய்தி.

சிவப் பரம்பொருளான மதுரை சொக்கநாதர் வறுமையால் வாடிய பாணபத்திரன் என்ற புலவனையும் வாழவைத்து அருள் கொண்டார்.

## சேர நாட்டுச் செய்தி

சேர நாட்டில் சேரமான் பெருமான் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் சித்தத்தில் சிவனையே எப்போதும் சிந்தித்து இருப்பான். வருகின்ற வறியவர்க்கும், சிவனடியார்களுக்கும் வாரி, வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தான்.

உவர் மண் ஏற்றி வந்த வண்ணான் மீது உவர்மண் பட்டுத் திருநீறாகக் காட்சி தந்தது. யானைமீது ஊர்வலம் வந்த சேரமான், வண்ணானை முழுநீறு பூசிய சிவனடியார் எனக் கருதி யானை மீதிருந்து இறங்கி வண்ணானிடம் ஓடி அவன் திருவடியில் விழுந்து வணங்கினான். அதிர்ச்சியுற்ற வண்ணான் நடுங்கி நான் "அடி வண்ணான்" என்று கூறிட நான் 'அடிச் சேரன்" என்றான் சேர மன்னன்.

காணுகின்ற காட்சியெல்லாம் சிவக் காட்சியாகவே கண்ட சேரமான் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தவன். அவரோடு இணைந்து பல திருத்தலங்களுக்குச் சென்று வழிப்பட்டவன். 'பொன் வண்ணத்து அந்தாதி" "திருக்கைலாய ஞான உலா" முதலிய நூல்களை பாடியவன்.

இவன் இயற்றிய திருகைலாய ஞானஉலா. சிவபெருமான் முன்னிலையில் கைலை மலையில் அரங்கேற்றப்பட்ட பெருமை உடையது. கைலையில் முதன்முதலில் அரங்கேற்றப்பெற்ற முதல் தமிழ்நூல் இது என்றும் கூறலாம்.

சேரமான் பெருமான் தமிழையும், சைவத்தையும் தமது இரு கண்களாகக் கொண்டவர். திருக்கைலாய ஞான உலாவில் மடந்தைப்பருவத்தைக் கூறும்போது "தீந்தமிழின் தெய்வ வடிவாள்" என்று குறிப்பிடுவர்.

"கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள" என்ற திருக்குறளை திருக்கைலாய ஞான உலாவில் அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

'இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்ற திருக்குறளை அப்படியே, கீழ்க்கண்ட வண்ணம் எடுத்தாண்டுள்ளார்.

"இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு என்னும் - சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து - நல்கூர்
கடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள்"

இத்தகைய தமிழ்ப் புலமையும் இடையீடற்ற சிவசிந்தனையும், வள்ளல் தன்மையும் கொண்ட சேரமான் பெருமாளுக்கு சிவபெருமான் எழுதிய மடல் பதினொன்றாம் திருமுறையில் முதற்செய்யுளாக உள்ளது. அச்செய்யுள்:

மதிமலி புரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பாய் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்போல் அன்பன் தன்பால்

காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே''

என்பதாம்.

தம்முடைய அடியாரும், ஏழைப்புலவனு மாகிய தொண்டன் வறுமையில் வாடக்கூடாது என்று சொக்கநாதர் மடல் எழுதி பொருள் கொடுக்கச் சொன்னது வியத்தற்குரியது.

இறைவனால் பொருள் கொடுக்க முடியும். ஆயினும் சேரமான் பாணப்பத்திரன் அருமையினை யும் உலகிற்குக் காட்டவே இவர் மடல் எழுதி அனுப் பினார்.

உலக இலக்கிய வரலாற்றில் இறைவன் தன் அடியார்க்காக மடல் எழுதி அனுப்பிய வரலாறு வேறு எங்கும் இல்லை எனலாம்.

தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவராக வீற்றிருந்த சொக்கநாதர். தமிழில் தன் நண்பனுக்காக மடல் எழுதியது. பாராட்டுதற்குரியது. தலைமைப் பொறுப் பேற்றிருப்போர் தொண்டர்களுக்குத் துணை நிற்க வேண்டும் என்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார் சொக்கநாதர்.

இந்த மடல் அமைப்பே மிக அருமையாக உள்ளது.

நாம் இப்போது எழுதும் கடிதத்தில் முதலில் கடிதம் எழுதுவோரின் ஊர்ப்பெயரே எழுதுவோம்.

இதைப் போன்றே சொக்கநாதரும் மாடக்கூடல் என்று மதுரையை குறிப்பிடுகிறார்.

'மதிமலிப்புரிசை மாடக்கூடல்''

என்று தொடங்குகிறது மடல்.

விண் தோய்ந்த மாடங்களையும் கோட்டை கொத்தலங்களையும் கொண்ட மதுரையாம்.

யாம் வீற்றிருக்கும் மதுரை இதனால் செல்வச் சிறப்பும், பாதுகாப்பு நடையும் கொண்ட மதுரை என்ற குறிப்பும் புலப்படுகிறது.

இந்த மதுரை வானுலகில் இல்லை. நிலவுல கத்திலேயே உள்ளது. அதுவும் நீர்வளம், நிலவளம் நிறைந்த நகராக உள்ளது. பால்நிறமுள்ள அன்னங் கள் நீரில் நீந்தி விளையாடும் மதுரையில் கொலுவீற் றிருக்கும் சொக்கனாகிய யான் எழுதுகிறேன் என்று மடல் பேசுகிறது.

செழுமையான மதுரையில் வெள்ளை உள்ளம் கொண்ட, தூய்மையான மக்களே வாழ்கின்றனர் என்ற குறிப்புத் தோன்ற 'பால்நிற வரிச் சிறகு அன்னம்'' என்றார்.

ஒரு மன்னனுக்கு மடல் எழுதுவோன் தன் னாட்டின் சிறப்பினையும் செல்வத்தையும் எடுத்துக் காட்டி எழுத வேண்டும் என்பதே இயல்பு. அவ் இயல்பிற்கேற்ப இம்மடல் எழுதப் பெற்றது.

சோலைகள் சூழ்ந்த 'ஆலவாய்! எனப் பெறும் நகரில் வாழும் சிவன் (சிவபெருமான் அல்லது இறைவன் என்று கூறாது எளிமையாகச் சிவன் என்றார்). எழுதும் கடிதம் என்னவென்றால், பாவலர்களுக்குக் காலமழையாகவும், கருணை வடிவாகவும் காட்சி தந்து, ஒன்றிய சிந்தையுடன் வாரி வாரி வழங்கிவரும் வெண்கொற்றக்குடையின் கண் வீற்றிருந்து, பேராற்ற லோடு அரசுபுரியும் சேரமன்னனே உனக்கொரு செய்தி என்கிறது மடல்,

மடல்பெறுவோரின் பெருமையினை உள்ள வாறு உரைத்து எழுதுவது நனிநாகரிகம். அந்த நாகரிக முறைக்கேற்ப, செல்வச்சிறப்பும், அறநெறியும், ஆற்ற லும் சான்றவன் சேரமன்னன் என்றார். (செருமா உகைத் தல் = போர்க் களத்தில் புலிபோல் பாயும் தன்மை யினைக் குறிப்பது)

மடல் கூறும் செய்தி இனி பேசப்படுகிறது.

பண்பால் வரும், இந்த பாணபத்திரன் யாழ் மீட்டும் இயல்பினன். இசைத்திறம் மிக்கவன். நாளும் இசையால் எம்மை மகிழ்விக்கும் இசைவாணன். உன்னைப் போன்று இவனும் என்பால் உளங்கனிந்த அன்பினன். பரிசு பெற முழுத் தகுதியுடையவன். (தகுந் தவர்களுக்கே பரிந்துரை செய்ய வேண்டும் என்பது புலப்படுகிறது.) நின்னைக் காணவருகிறான். அவ னுக்கு நிறைந்த பொருள் (மாட்சிமை தகுந்த பொருள்) தீதிலாத பொருள். தீதின்றிவந்த பொருள்) கொடுத்து அனுப்பி விடுக (அவன் என்னைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டுமல்லவா? நீ அவன் இசையில் மயங்கி அங்கேயே அவனை வைத்துக் கொள்ளாமல் அனுப்பி விடு. அவனது குடும்பம் அவனை எதிர்நோக்கி யிருக்கு மல்லவா? அதனால் அனுப்பி விடுக) என்று மடல் நிறைவுபெறுகிறது.

சமய உலகில் எழுதப் பெற்ற இம்மடல், தமிழ் மக்களின் சமயச் சால்பிற்கு ஏற்ற சான்றாக மிளிர் கிறது.

இலக்கியங்களில் கோவலன் மடல் எழுதி யுள்ளான். மடல் இலக்கியங்களும் உள்ளன. பிற் காலத்தில் பாரதியும் மன்னருக்கு மடல் எழுதினான். ஆயினும் தெய்வமே தம் தொண்டருக்காக மடல் எழுதி மாண்பொருள் பெற்றுத் தந்தது போற்றுவதற் குரியதன்றல்லவா?

★ ★ ★

# மகா மாரியம்மன் அருள் வரலாறு

- டாக்டர் இரா. செல்வகணபதி, எம்.ஏ.,பிஎட்.,பிஎச்.டி,

### மாரியம்மன் வழிபாடு:

மாரியம்மன் வழிபாடு பலநூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்களால் மிகுந்த விருப்பத்தோடு மேற்கொள்ளப் பெற்றுவருகிறது. தமிழ்நாட்டில், பெரும்பாலான சிற்றூர்களிலும், நகரங்களிலும் மாரியம்மனுக்கு எனத் தனிக்கோயில்கள் உள்ளன. மழை வளம் வழங்கும் தெய்வம் என்றும், அம்மை முதலிய நோய் நீக்கி அருள்வழங்கும் இறைவன் என்றும், சிற்றூர்களில் காவல் தெய்வம் என்றும் மாரியம்மனைத் தமிழ்மக்கள் போற்றி வழிபட்டு வருகின்றனர். தமிழ்நாட்டில் மட்டுமன்றி, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, ஜாவா முதலிய கீழை நாடுகளிலும், தமிழ்மக்கள் அதிகமாக வாழும் சில மேலை நாடுகளிலும் மாரியம்மனுக்கெனத் தனிக்கோயில்கள் உள்ளன. சிறப்பான வழிபாடுகளும் அங்கெல்லாம் நடைபெற்றுவருகின்றன.

### பலவகை ஆய்வுகள்

மாரியம்மன் வழிபாடு என்பது, தமிழ் மக்களின் சக்தி வழிபாட்டின் ஒரு பிரிவே என அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். வேறு ஒரு பிரிவினர் தமிழ் மக்கள் மேற்கொண்ட பத்தினி வழிபாடே பின்னர் மாரியம்மன் வழிபாடாகத் திரிந்து, மிகப் பிற்காலத்தில் சக்தி அம்சமாகக் கருதப்பட்டிருக்கவேண்டும் என்று ஆராய்ந்து உரைக்கின்றனர். அச்சம் காரணமாகக் கீழ்நிலையில் வாழ்ந்திருந்த கிராமப்புற மக்கள் மேற்கொண்டு ஒழுகிய சிறு தெய்வ வழிபாடுகளுள் ஒன்றே மாரியம்மன் வழிபாடு என்பர் சிலர். இலங்கைத் தமிழ் அறிஞர்கள் சிலர், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற கண்ணகிவழிபாடே, மழை தரும் தெய்வம் என்ற பொருளில் மாரியம்மன் வழிபாடாக உருப்பெற்றது என்று கூறுகின்றனர். ஆய்வுகள் பலவாக இருந்தாலும், இன்று மாரியம்மன் வழிபாடு உமையவள் வழிபாடாகவே சிவபெருமானின் சக்தி அம்சமாகவே கருதப்பெற்று வருகின்றது.

### திருநாமங்கள்


மாரியம்மன் அம்சமாகவே, இன்று தமிழ் நாட்டில் வெவ்வேறு திருநாமங்களில் இவ்வம்மைக்குக் கோயில்கள் அமைந்துள்ளன. ஊர்எல்லையில் காவல் தெய்வமாக விளங்குதல் பற்றி எல்லையம்மன் என்றும், மழை வழங்கும் மேகத்தை ஏவல் கொள்ளுதல் பற்றிச் செல்லியம்மன் (செல்-மேகம்) என்றும், வெப்பு நோய்களை நீக்கியருளுதல் பற்றி அங்காளம்மன் என்றும், குளிர்ச்சியைத் தருதல் பற்றிச் சீதளாதேவி என்றும், பலபெயர்கள் வழங்கப்பெற்று வருகின்றன. இவையன்றி, இரேணுகாதேவி, கருமாரி முதலிய பெயர்களில் திகழும் அம்மையும் மாரியம்மன் அம்சமே என்று கூறப்படுகிறது.

### மாரிக்கு முதற்கோயில்

சக்திவழிபாடு பற்றிய குறிப்புக்கள் பலவற்றைச் சங்கஇலக்கியங்கள் முதலாகக் காணமுடிகிறது. மாரியம்மன் வழிபாடு பற்றிய அவ்வாறான குறிப்புக்களைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடியவில்லை. மாரியம்மன் வழிபாடு தமிழ்நாட்டில், எக்காலத்தில் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது என்பதைத் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த பிற்காலச்சோழ மரபினரே முதன்முதலாக மாரியம்மனுக்கு தனிக்கோயில் எடுப்பித்துள்ளனர். தஞ்சாவூருக்குக் கிழக்கே ஐந்துகல் தூரத்தில் மாரியம்மன் கோயில் என்ற பெயரில் அமைந்துள்ள சிற்றூரும், அங்குள்ள ஆலயமும் கி.பி.10-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலப் பகுதியில் சோழ மன்னர்களால் தோற்றுவிக்கப் பெற்றனவாகத் தெரிகின்றன. மாரியம்மனுக்கு அமைந்த முதல் தனிப்பெரும் கோயில் இதுவே எனக் கூறப்படுகிறது. எனவே கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது மாரியம்மன் வழிபாடு என்பது தெளிவாக அறிய வருகிறது.

### தமிழகத்தில் சக்தி வழிபாடு

சிவபரம் பொருளின் அருளைச் சக்தி என்று குறிப்பர் சாத்திர வல்லுநர். இறைவன் அருட்சக்தியைப் பெண் தெய்வமாக உருவகித்து வழிபடுதல் நெடுங்காலமாக நிலவி வருகிறது. கி.மு.ஏழாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலேயே சக்திவழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. நேரடியாகப் பாலைத் தெய்வமாகக் கொற்றவை தொல்காப்பியத்தில் குறிக்கப்பெறவில்லை என்றா



லும், வெற்றித் தெய்வமாகச் சக்தியைக் கொற்றவை என்று தொல்காப்பியம் குறிக்கிறது. உரையாசிரியர்கள் நிலத் தெய்வமாக ஏற்றுப் போற்றியுள்ளனர். 'மறங்கடை கட்டிய கொற்றவை நிலை'' எனத் தொல்காப்பியம் துறை வகுத்துக்காட்டுகிறது.

### சங்க இலக்கியங்களில் சக்தி வழிபாடு:

தொல்காப்பியத்தை அடுத்துச் சங்க இலக்கிய மேற்கணக்கு நூல்களாகிய பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை நூல்களுள் கொற்றவை வழிபாடு பற்றிய குறிப்புகள் உள்ளன. 'பழையோள்'' என்றும், 'வெற்றி வெல்போர்க் கொற்றவை'' என்றும் திருமுருகாற்றுப்படை குறிக்கிறது. இங்கே வெற்றித் தெய்வமாகிய கொற்றவை உமையம்மை அம்சமாக, சிவனார் துணைவி என்றும், முருகனின் தாய் என்றும் குறிக்கப்பெறுகிறாள். கொற்றவையைப் போற்றி காடுகிழாள் என்ற பெயரில் பரிபாடல் இசைப்பாடல்களைக் கொண்டிருந்ததாக அறியமுடிகிறது. அப்பாடல்கள் கிடைத்தில. போர்வெற்றிக்கு வீரர்கள் கொற்றதவயை வழிபட்ட செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

### சிலப்பதிகாரத்தில்

சிவசக்தி தொடர்பான புராண வரலாறுகளும் கதைகளும் சிலப்பதிகாரத்தில் விரிவாக இடம்பெற்றுள்ளன. வேட்டுவவரி (
வழிபாட்டு இசைப் பாடல்
கடலாடு காதையிலும், வ
சிவனோடு அம்மை ஆடிய ப
அம்மையின் வீர வரலாறுக
சிலப்பதிகாரத்தின் நிறைவில்
கண்ணகிக்குக் கோட்டம் அ
குறிக்கப்பட்டுள்ளது. நிலத்
தொடங்கப் பெற்று, வெற்றி
முற்று, உமையவள் அம்ச
வளர்ந்த சக்திவழிபாட்டில், பத்
சிலப்பதிகாரக் காலத்தில் உருப்
மணிமேகலை, பழமொழி நா
முதலிய நூல்களிலும் சக்திவழிபா
காணப்படுகின்றன.

### சைவத் திருமுறைகள்

கி.பி.ஏழாம் நூற்றாண் ... ர்
தேவாரங்களில் உமை வழிபா ... வழிபாட்டின் அங்கமாக உள்ளடக்கியே பேசப்படுகின்றன. திருவாசகத்தில் திருவெம்பாவை, சக்தியை வியந்தது என்று குறிக்கப்படுகின்றது. 'காதார் குழையாட'' என்று தொடங்கும் திருவெம்பாவைப்பாடல் முதல் சக்தி தோத்திரமகச் சைவத் திருமுறைகளுள் காணப்படுகின்றது. திருமந்திரத்தின் நாலாம் தந்திரத்துள் சிவ சக்தி வழிபாடு, சக்திமந்திரங்கள், சக்கரங்கள் முதலியன விரிவாகப் பேசப்பட்டுள்ளன. கலிங்கத்துப்பரணி முதலிய பரணி நூல்களில் 'கொற்றவை'' வழிபாடு பற்றி விரிவான செய்திகள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டுச் சித்தர்களுள் வாலை, பாலா, மனோன்மணி முதலிய பெயர்களில் சக்தியைப் போற்றியுள்ளனர்.

### சக்தித் தோத்திரங்கள்

தமிழகத்தின் நீண்ட பாரம்பரிய சக்தி வழிபாட்டின் பயனாக, அரிய சக்தி வழிபாட்டுத் தோத்திர நூல்கள் பல தோன்றின. மதுராபுரி அம்மைமேல் அம்பிகை மாலை என்ற முப்பது பாடல்கள் கொண்ட சிறுநூல் வரகுணராம குலசேகர பாண்டியரால் பாடப்பெற்றுள்ளது அதிவீரராம பாண்டியர் தம் காசிக் காண்டத்தில் 'சக்திக்கவசம்'' என்ற பகுதி ஒன்றைப் பாடியுள்ளார். அபிராமிபட்டர் திருக்கடவூர் அபிராமி அம்மைமேல் 'அபிராமி அந்தாதி, அபிராமி அம்மை பதிகம்'' முதலியன யாத்துள்ளார். கவிராஜபண்டிதர் ஆதிசங்கரரின் 'சௌந்தரியலகரி'' யைத் தமிழில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துள்ளார். இவரே பாடிய 'வராகிமாலை'' பகைவரை வெல்லப் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. மற்றும் சௌந்தரிய அந்தாதி, புவனாம்பிகை கலைஞானதீபம் என்பனவும் இவரால் பாடப்பெற்றன.

### சிற்றிலக்கியங்கள்

கல்விதரும் தெய்வமாகிய சரஸ்வதி, செல்வம் தரும் தெய்வமாகிய இலக்குமி முதலிய பெண் தெய் வங்களைப் போற்றி மேலும் தமிழில் பலநூல்கள் பாடப்பெற்றன. கம்பர், பாடியதாக வழங்கப்பெற்று வரும், 'சரசுவதி அந்தாதி'', குமர குருபர சுவாமிகள் பாடிய 'சகல கலாவல்லிமாலை'' முதலியன குறிப் பிடத்தக்க சரஸ்வதி துதி நூல்களாகும். இலக்குமி தேவிமேல் அதிவீரராமபாண்டியர், தொட்டிக் கலை சுப்பிரமணிய புலவர் முதலியோர் சிலநூல்கள் பாடி யுள்ளனர். பிற் காலத்தில் சிவாலயங்களில் எழுந்தருளி யுள்ள அம்மை மீது அம்மை தோத்திரமாகப் பிள்ளைத் தமிழ், அந்தாதி, மாலை, கலிவெண்பா முதலிய நூல்கள் பல பாடப் பெற்றன. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காந்திமதி யம்மை பிள்ளைத்தமிழ், கோமதி அந்தாதி முதலிய நூல்கள் சிறப்பானவை.

### மாரியம்மன் தாலாட்டு

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார் சிவசக்தி தோத்திரப்பாடல்களைப் பாடி யுள்ளார். இவரே மாரியை, முத்துமாரி என்ற பெயரில் சிறப்பித்துப் பாடுகிறார். நாட்டுப்புற பாடல் அமைப் பில் மாரிமீது மாரியம்மன் தாலாட்டு என்ற நூல் ஒன்று பாடப்பட்டுள்ளது. இதனை, அம்மை முதலிய நோய் பீடித்த காலத்தில் பாடுவதும், படிக்கச் சொல்லிக் கேட்பதுவும் வழக்கமாகவுள்ளது. ஏறத்தாழ இரண் டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக வளர்ந்து வரும் சக்தி வழிபாட்டின் ஒரு பிரிவாகவே மாரியம்மன் வழிபாடும் வளர்ந்து வந்துள்ளது. மாரியம்மன் வரலாறாகப் பல கதைகள் வழங்கப்பெற்று வருகின்றன. பெரும்பாலும் செவிவழிச் செய்தி யாகவே அவை வழங்கி வந்துள்ளன.

### மாரி வரலாறு

கி.பி.1899 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற ஆ.சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி, மாரியம்மன் வரலாறாகச் சிலசெய்திகளைத் தரு கின்றது. மாரி என்ற சொல்லால் குறிக்கப்பெறுபவர் ஜமதக்னி மாமுனிவரின்துணைவியாகிய இரேணுகை. இவரை இரேணுகாதேவி என்றும் குறிப்பர். ஒருமுறை கார்த்த வீரியாச்சுனனின் புதல்வர்கள், ஜமதக்னி முனி வரைக் கொன்றனர். இரேணுகை கணவன் சிதைமேல் பாய்ந்து உடன்கட்டை ஏறினார். இவ்வம்மையின் மரணத்தைத் தடுக்கும் நோக்குடன் இந்திரன் வரு ணனை ஏவிப் பெருமழை பெய்வித்தான். சிதை அவிந்தது, இரேணுகை அணிந்திருந்த ஆடைகள் எரிந்து, உடலெங்கும் தீக்கொப்புளங்கள் தோன்றின. சிதையிலிருந்து எழுந்த இரேணுகை, ஆடை எரிந்து போயினமையால் அருகிலிருந்த வேப்பிலையைப் பறித்து உடையாக அணிந்தனர். அருகிலிருந்த புலைச் சேரிக்குச் சென்ற இரேணுகை பசிதீர்க்க உணவு தரு மாறு அங்குள்ள மக்களிடம் வேண்டினார்.

### சக்தி அம்சமாதல்

அம்மையின் தோற்றத்தைக்கண்டு, இவர் வேதியர் குலப்பெண் என்று கருதிய புலைச்சேரி மக்கள், தாங்கள் உண்ணும் உணவை வழங்காது பச்சரிசி, வெல்லம், மா, இளநீர், பானகம் முதலியனவற்றை வழங்கினர். அவற்றை விருப்பத்தோடு உண்டு இளைப் பாறி இரேணுகை, அடுத்து ஒரு வண்ணார்வீதி சென்று, அவர் வழங்கிய ஆடையை விரும்பி அணிந்தனர். அம்மை, மீண்டும் தம் கணவர் சிதைமுன் சென்று வருந்திநின்றனர். அக்காலை, சிவபெருமான் அசரீரி யாக இரேணுகையை நோக்கி 'நீ நம் சிவசக்தி அம்ச மாக வந்தவள்; நீ நிலவுலகத்திலேயே கிராமதேவதை யாகக் கோயில்கொண்டு வாழ்ந்திடு; கிராமப்புற மக்க ளுக்கு வரும் துன்பங்களையும், துயரங்களையும் நீக்கி அவர்களுக்கு அருள் செய்; நீ மாரி எனப் பெயர்கொண்டு சக்தி அம்சமாக வாழ்ந்திடு'' என்று வாழ்த்தியருளினார்.

### சிவனார் கட்டளை

மேலும், சிவபெருமான், உன் உடம்பில் ஏற் பட்ட தீப்புண்ணாலாகிய கொப்புளங்களே உலக வர்க்கு வரும் அம்மை நோய். நீ தரித்த வேப்பிலையே அந்நோய்க்கு மருந்து. நீ விரும்பிப் புசித்த பச்சரிசி, மா, வெல்லம், இளநீர், பானகம் முதலியனவே உனக்கு உரிய நைவேத்தியம், உன்னைப்போற்றி வழிபடு வார் துயர்நீக்குக. போற்றாதாரை, உன் அருகில் இருக் கும் சண்டாள ரூபத்தை உன்னுள் ஆவேசித்துக்கொண்டு வருத்துக. என்றும் உரைத்து மறைந்தனர். இரேணுகை மாரிஎன்றும், முத்துமாரி என்றும் அழைக்கப்பெற்றார். இரேணுகை வழிபாடே மாரியம்மன் வழிபாடாக மருவி வழங்குகின்றது என்பது ஒரு வரலாறு.

### இலக்கியக் குறிப்புகள்

மேற்குறித்த வரலாற்றுக்கு மாறாக இரேணுகை வரலாறு பற்றி ஆ.சிங்காரவேலு முதலியார் பிறிதொரு வரலாற்றையும் குறித்துள்ளார். இரேணுகை வரலாறு பற்றிய சிறு குறிப்புகள் வியாச பாரதம், உபநிடதம், தேவிபாகவதம், சிவஞான சுவாமிகள் பாடிய காஞ்சி புராணம் முதலியவற்றிலும் சிறுசிறு மாற்றங்க ளுடன் காணப்படுகின்றன.

### அபிதான சிந்தாமணியில்

இரேணுகை, இரேணு என்னும் மன்னன்மகள், ஜமதக்கினி மாமுனிவரின் துணைவி. சிறந்த கற்



பரசியாகத் திகழ்ந்த இரேணுகை நாள்தோறும் கங்கையில் நீராடி, புதிய பச்சை மண்ணால் குடம் சமைத்து நீர் முகப்பார். இவர் கற்புத்திறத்தால் பச்சை மண்குடம் உடையாது நிற்கும். ஒருநாள் அம்மை பச்சை மண் குடத்தில் நீர் முகக்கும்போது, விண்வழியே சென்ற சித்ரசேனன் என்பானின் வடிவம் நீரில் தோன்றிற்று. அவன் அழகைக் கண்டு சற்றே நிலைகுலைந்தாள். புதுமண்குடம் உடைந்தது. பலமுறை முயன்றும் குடம் உருப்பெறவில்லை. இரேணுகை மனம்வருந்திக் கணவர் முன் சென்றாள். சினம்கொண்ட ஜமதக்கினி முனிவர், தம் குமாரர்களாகிய தன்னுவன், அனுவன், விசுவாவசு முதலியோரிடம் இரேணுகையைக் கொல்லுமாறு கூற, தாயாரைக் கொல்ல இயலாது என அவர்கள் மறுத்தனர். நான்காவது குமரராகிய பரசுராமரிடம் தந்தை கட்டளையிட, பரசுராமர், எதிர்த்தவர்கள் பலரையும் கொன்று, தாயாரையும் கொலைசெய்து, தந்தை முன்னர் துயரத்தோடு நின்றார்.

**கணவர் கட்டளை**

தம் சொற்கேட்ட பரசுராமனுக்கு வேண்டிய வரம்தர ஜமதக்கினி முன்வந்தார். பரசுராமர் தம் தாய் உயிர்பெற வரம் வேண்டினார். உடன்பட்ட ஜமதக்கினி மந்திர நீர் தெளித்துத் தாயை உயிர்ப்பித்து வர ஆணையிட்டார். பரசுராமர் கங்கைக்கரை சென்று, தன் தாயின் தலையை எடுத்து, அங்கே வெட்டுண்டு கிடந்த வேறொரு பெண் ஒருத்தியின் உடலோடு பொருத்துகின்றார். இரேணுகை உயிர்பெற்று எழுகிறார். கணவர் முன்சென்ற இரேணுகையை, 'நீ கிராமப்புறங்களில் நிலைத்து நின்று, அங்குள்ள மக்களின் நோய்களை நீக்கி, அவர் தரும் பலிகளை ஏற்று நிலைபெற்று வாழ்ந்திரு'' என்று பணித்தார். அம்மை தலை மட்டும் வெளியில் தோன்றுமாறு, உடல் மறைத்துக் கோயில் கொண்டு அருள்பாலித்து வருகிறார்.

**சிவபுராணத்தில் இரேணு**

இரேணுகை வரலாறு பற்றி வேறுபட்ட கதை ஒன்று சிவபுராணத்தில் காணப்படுகிறது.

முன்னொருகாலத்தில் பிருகு வம்சத்தில் உதித்த உருத்திராம்சமான ஜமதக்னி முனிவர் காட்டில் தவமியற்றி வந்தார். அப்பொழுது விதர்ப்ப நாட்டை ஆண்டுவந்தவன் இரைவதராசன். அவனுக்கு பிரமனின் வரத்தால் உதித்தவர், உமையம்மையின் அம்சமான இரேணுகை. தம்மைத் திருமணம் புரிந்துகொள்ளுமாறு ஜமதக்கினி முனிவரை வற்புறுத்தினார். ஜமதக்கினி முனிவர் கோபமுற்றார். தனது சீடர்களில் சிலரை அழைத்து, இரேணுகையைக் கொன்று வருமாறு கூறினார். இரேணுகை தன்னைக் கொல்லவந்த ஜமதக்கினி முனிவரின் சீடர்களை கொன்றுவிட்டார். அதனால் சீற்றமடைந்த முனிவர் தானே போருக்குக் கிளம்பினார். இரேணுகையுடன் போரிட்டார். இரேணுகை முனிவரைக் காட்டின் பல பகுதிகளுக்குக் கொண்டுசென்று ஓரிடத்தில் தன்தலைமட்டும் சிலையாகத்தெரியும் வண்ணம் செய்து மறைந்தார். முனிவர் அச்சிலையைக் கண்டு இரேணுகையைச் சிலையாகவே இருக்குமாறு சாபமிட்டுத் தன் ஆசிரமம் திரும்பினார்

முனிவர் இட்ட சாபம் இரேணுகையை நெருங்க வில்லை.

இரேணுகை முனிவரின் சீடர்களை முன் போலவே உயிர்பெற்று வாழுமாறு செய்து அவர் களையும் உடனழைத்துக்கொண்டு ஆசிரமம் சென்றார். முனிவர் மனம்மாறி இரேணுகையை மணம்புரிந்து கொண்டார். இரேணுகைக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர்.

இரேணுகை நாள்தோறும் காலையில் எழுந்து, நீராடி முனிவரின் வழிபாட்டிற்குக் கங்கைநீர் எடுத்து வருதல் வழக்கம். தன் கற்பின் ஆற்றலால் நீராடியபின் புதுமண்ணால் குடம்செய்து, கங்கையில் கை வைத்த வுடன் ஒன்றுதிரண்டு நீர் குடத்தை அடையும். இரேணுகை அதனை ஆசிரமத்திற்கு எடுத்து வருதல் வழக்கம்.

இரேணுகை கங்கையில் நீராடும்போது விண் வழியாகச்சென்ற கார்த்த வீரியார்ச்சுனின் நிழல் நீரில் தெரியக்கண்ட இரேணுகை, அதனைக் கண்டுவியந்து, பின் தெளிந்து எழுந்து கங்கையைத் திரட்ட முற்பட்டார். கங்கை ஒன்று சேரவில்லை. வெறுங்கையுடன் ஆசிரமத் திற்குத் திரும்பினார் இரேணுகை.

ஜமதக்கினி முனிவர் ஞானக்கண்ணால் நிகழ்ந் ததை அறிந்து சினந்து தனது நான்காவது புதல்வராகிய பரசுராமனை அழைத்து இரேணுகையின் தலையை வெட்டும்படி உத்தரவிட்டார். தந்தையின் கட்டளைப் படி பரசுராமர் தன்தாயின் தலையை வெட்டியதோடு அத்தலையை வெட்டிய வலக்கையையும் வெட்டிக் கொண்டார். தன் கட்டளையை நிறைவேற்றிய தன்ய னது செயல்கண்டு மகிழ்ந்து, பரசுராமரை நோக்கி, உனக்கு யாது வரம் வேண்டும் கேள் எனக்கூறினார். பரசுராமர் தந்தையை வணங்கித் தாயை எழுப்பித் தரவேண்டுமென வேண்டினார். முனிவர் பரசுராமரை நோக்கி அவரது வெட்டுண்டகையை முன்போல ஒட்டிவைக்குமாறு கூறினார். வெட்டுண்ட பாகம் ஒட் டிக்கொண்டு பழைய நிலையை எய்திற்று. அவ்வாறு அவரது தாயார் தலையையும் வெட்டுண்ட உடலோடு சேர்க்குமாறு கூறினார். பரசுராமர் தன் தாயை வெட்டிய இடத்தில் கிடந்த புலைச்சியின் தலையைத் தவறுதலாக எடுத்து வந்து தாயின் உடலோடு சேர்த்தார். இரேணுகை அத்தலையோடு உயிர் பெற்று எழுந்தார்.

சிலகாலம் சென்றது, ஜமதக்கினி முனிவர் இறந்தார். முனிவரின் உடலை தகனம் செய்யும்போது இரேணுகை உடன்கட்டை ஏறினார். இந்நிகழ்ச்சியை அறிந்த இந்திரன் இரேணுகை இறவாமல் இருந்து உலகிற்கு நலம் செய்யவேண்டுமென்னும் கருத்தால் புனித நீரைப்பொழிந்து சிதையை அணைந்துபோகுப் படிச்செய்தான். சிதை அவிந்தது. இரேணுகையின் ஆடைகள் எரிந்துவிட்டன. உடல் முழுவதும் தீக் கொப்புளங்களுடன் எழுந்த இரேணுகை வேப்பிலை யால் உடலை மறைத்துக்கொண்டு சென்று, வண்ணான் ஒருவனிடம் பழைய ஆடைபெற்று, உடுத்திக்கொண்டு பசிமேலீட்டால் புலைச்சேரி சென்று உணவு கேட்டார். புலைச்சேரி மக்கள் மீன்குழம்பு கலந்த பழைய அன் னத்தை உணவாகப் படைத்தனர். அவ்வன்னத்தைப் பார்த்த அளவில் இரேணுகை மீனை வெங்காயமாக மாற்றிஉண்டார். இதனைக்கண்ட புலையர்கள் இவள் அந்தணப்பெண் என்றும், இவளுக்கு நாம் உணவு அளித்தல் கடாதென எண்ணி, சர்க்கரை கலந்த அரிசி மாவையும், பேயன்பழம், பானகம், நீர்மோர் முதலிய வற்றையும் அளித்து உண்ணச்செய்தனர். இரேணுகை அவற்றை உண்டு அவர்களிடமிருந்து பிரிந்து தேவர்கள் பலரும் தன்னைச் சூழ்ந்துவர சிவபெருமான் திருமுன் சென்றார். பெருமான் இரேணுகையைப் பார்த்து 'நீ பு சக்தி அம்சம் உடையவள். இறப்பதற்கு உரியவள் அல்லை; ஆதலால் இவ்வுடலுடனேயே உலகில் இருந்து மக்களைக் காப்பாற்று எனவும், ஜமதக்கினியை மணக்குமுன், புதருக்குள் சரீரத்தை மறைத்துச் சிரம் சிலை உருவில் தெரியும்படிச் செய்தாய். அவ்வண் ணமே, எப்பொழுதும் தலைமட்டும் தெரியுமாறு இருந்து மக்களைக் காப்பாற்றி வருக எனவும் பணித்தார்.

இரேணுகை நிலவுலகை அடைந்து ஊ எல்லையில் காவல் தெய்வமாய் விளங்கி மக்கள், மாடு கன்றுகள் இவற்றுக்கு வெம்மைத்தன்மைகளால் விளை யும் அம்மை, காலரா, சீதபேதி முதலானவற்றையும் கோமாரி போன்ற நோய்களையும் குணப்படுத்தி நல செய்யும் சக்தியாக விளங்கி அருள்புரிந்துவரத் தொடங் னார்.

## சீதளாதேவி

அசுரர்களின் ஆட்சிக்காலங்களில் உலகி தருமம் குன்றியது. அதர்மம் மேலோங்கியது. அசு களால் துயருற்ற தேவர்கள், தெய்வத்துணையா அசுரர்களை அழித்தும், ஒடுக்கியும், பாதாள உ கிற்கு அனுப்பியும் மீண்டும் உலகில் அறநெறி நிலைநாட்டினர். தேவர்களால் துயருழந்த அசுரர்க தேவர்களை அழிக்கத் திட்டமிட்டனர்.

தங்கள் குலகுருவான சுக்கிராச்சாரியாரிட சென்று முறையிட்டனர். சுக்கிராச்சாரியார் தேவர்கள ஒடுக்க எண்ணி அபிசார வேள்வி ஒன்று இயற்றின வேள்வியின் விளைவால் உலகில் வெம்மை விளை தது. தேவர்களின் உலகமெங்கும் கொப்புளங்

தோன்றின. தேவர்கள் அவற்றால் மிக்க இடர்ப்பாடுற்று செய்வதறியாது சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். இறைவன் அவர்கள் முன்தோன்றி 'யாது வரம் வேண்டும்'' எனக் கேட்டார். தேவர்கள் தாங்கள் அடைந்துள்ள வெம்மை நோயினின்றும் காத்தருளு மாறு வேண்டினர். தேவர்கட்கு அருள்புரியத் திருவுளம் கொண்ட பெருமான் தமது சடைமுடியிலுள்ள சந்திரனிலிருந்தும், கங்கையிலிருந்தும் மாயா சக்தியைக்கண்டு சிவந்த மேனியளாகவும், கத்தி, கபாலம், உடுக்கை, பாசம் ஆகியவற்றை ஏந்திய நான்கு திருக் கரங்கள் உடையவளாகவும், தீக்கொழுந்து போன்ற முடியுடையவளாகவும், ஐந்தலை நாகம் குடைபிடிக்கும் நிலையில் அம்பிகையைத் தோற்றுவித்து, அவள் கரங்களில் வேப்பிலையும், பிரம்பும் கொடுத்துத் தேவர்களைக் காக்குமாறும் உலகில் அவ்வப்போது அன்பர்களுக்கு விளையும் வெப்பு நோய்களைக் குணப் படுத்துமாறும் கூறிமறைந்தார்.

குளிர்ந்த சந்திரனிடமிருந்தும், கங்கையிலிருந்தும் தோன்றியதால் இவ்வம்மை சீதளாதேவி (குளிர்ந்த தன்மையுள்ளவள்) எனப் பெற்றார்.

சீதளாதேவி சிவபெருமானது கட்டளையை ஏற்றுத் தம் கரகத்தில் உள்ள கங்கை நீரை வேப்பிலையால் எடுத்துத் தேவர்கள் மேல் தெளித்துப் பிரம்பினால் அவர் தம் உடலைத் தடவினாள். தேவர்கள் உடலெங்கும் தோன்றியிருந்த கொப்புளங்கள் மறைந்தன. தேவர்கள் உடல் நலம்பெற்று அம்பிகை சீதளா தேவியை ஆராதித்து வழிபட்டனர்.

இவ்வம்பிகை சிவபெருமான் அருளியவாறு மாரியம்மன் முதலிய பெயர்களோடு உலகில் விளங்கி, மக்கள் அறநெறி தவறும் காலங்களில் வெப்பு நோயையும், வைசூரியையும் கொடுத்து மக்களைத் திருத்தி நல்வழிப்படுத்தி வருகின்றார். மழை வேண்டும் காலங்களில் மழை பொழியச் செய்து வருகிறாள்.

வைசூரிக்கு இவ்வம்மையின் அருளைத் தவிர உலகில் மருந்து எதுவுமில்லை என்பதை அனைவரும் அறிவர்.

இந்நோய் கண்டவர்கள் மாரியம்மனை வழிபட்டும், வேப்பிலை கொண்டு தடவச்செய்தும், ஆசார நியமங்களை மேற்கொண்டும் உடல்நலம் பெறுவதைக் காணலாம்.

## மகாமாரி

அசுர குருவான சுக்கிராச்சாரியார் அரக்கர்கள் அடையும் தோல்விகளைக் கண்டு மனம் பொறாதவராய் மீண்டும் அபிசாரவேள்வியைச் செய்தார். வேள்வித் தீயிலிருந்து கண்டார்க்கு அச்சம் விளைக்கும் தோற்றத்தோடு ஓர் அசுரன் தோன்றினான். அவ்வசுரன் தன்னை எதிர்க்க வந்தவர்களையெல்லாம் மரணம் செய்வித்தபடியால் மகாசுரன் எனப்பெயர் பெற்றான். மகாசுரன் தேவருலகம் சென்று தேவர்களைப் பலவாறாகக் கொடுமைப்படுத்தினான். மாகாசுரனின் கொடுமை தாங்காது தேவர்கள் அனைவரும் சென்று பலவாறு தோத்திரித்து அம்பிகையை வழிபட்டுத் தங்களைக் காத்தருளுமாறு பிரார்த்தினர்.

அம்பிகை தேவர்களின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து மகாசுரனைச் சம்கரிக்கும் பொருட்டுச் சிவந்த திருமேனியும், நான்கு கைகளும், அக்கைகளில் கத்தி, கபாலம், உடுக்கை, சூலம் உடையவளாய், ஐந்தலை நாகம், குடைபிடிக்க எழுந்தருளி மகாசுரனோடு கடும்போர்செய்து அவனைச் சம்ஹாரம் செய்தார்.

மகாசுரனைச் சம்ஹரித்த பெருமையால் இவ்வம்பிகைக்கு மகா(பெரிய)மாரி என்ற பெயர் உண்டாயிற்று.

## கருமாரி:

சென்னையை அடுத்துள்ள திருவேற்காட்டில் பிரபலமாக விளங்கும் தெய்வம் கருமாரி. கருமாரியம்மன் பற்றி இத்தலத்தில் கூறப்படும் வரலாறு அறிதற்கு உரியது. முன்னொரு காலத்தில் சிவபெருமான் உருத்ரபூமியாகிய இடுகாட்டிலிருந்து கயிலைக்குத் திரும்பினார். அப்போது தன் அருகில் இருந்த பாலாம்பிகையிடம் தன் திருமேனியிலிருந்து விபூதியை எடுத்துக்கொடுத்து, இதைக்கொண்டு உலகின் ஐந்தொழிலையும் புரிந்து வருக எனப் பணித்து கயிலை சென்று நிஷ்டையில் அமர்ந்தார். உமையம்மை ஈசன் இருந்த இடத்தில் வடகிழக்குத் திசையில் அமர்ந்து ஏழு கன்னிகைகளாகத் தம்மை மாற்றிக்கொண்டார். அவ்வேழு கன்னியர், அந்தராட்சி, ஆகாட்சி, பிரமாட்சி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, மாரி எனப் பெறுவர். அந்தராட்சி காடுகளிலும், ஆகாட்சி மலைகளிலும், பிரமாட்சி நதிகளிலும், காமாட்சி காஞ்சியிலும், மீனாட்சி மதுரையிலும், விசாலாட்சி காசியிலும் சென்று தங்குகின்றனர். மாரி இறைவன் தன்னைப் பிரிந்து சென்ற இடத்தையே தம் இருப்பிடமாகக் கொண்டார். தன்னை இரு உருவங்களாக மாற்றிக் கொண்டு முன்னும் பின்னுமாக அமர்ந்தார்.

முன்னுள்ள தன் உருவத்தில் தலை மட்டும் மேலே விளங்க உடலைப் பூமியாகிய கருவில் மறைத்து சிவசக்தி ஐக்கிய உருவாக விளங்குகிறார்.

பின்புறம் உள்ள இரண்டாம் உருவம் முழு உருவமாகக் கைகளில் பொற்கிண்ணம், சூலம், உடுக்கை இவைகளை ஏந்தி, ஐந்தலை நாகம் குடையாய் விளங்க வீராசனத்தில் அமர்ந்துள்ளார். முன்புறமுள்ள திருஉருவத்திற்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் திகழ்ந்து வருகின்றன.

### மாரியம்மனுக்கு உகந்த பொருள்கள்:

**வேப்பிலை**

இது சக்தி அம்சமாகவும், நோய்களைத் தடுத்துக் குணப்படுத்தும் மூலிகையாகவும் திகழ்வது. வெம்மையைத் தணித்துத் தண்மையைத் தரும் இவ்விலை மாரியம்மனுக்கு உகந்த பச்சிலை.

**மாவிளக்கு**

இரேணுகைக்குச் சேரிமக்கள் அளித்த இனிய உணவு. அரிசி மாவுடன் சர்க்கரை கலந்து பிசைந்து அதில் நெய்விட்டு விளக்கேற்றி அம்பிகைக்கு நிவேதனமாகப் படைத்து அதனைப் பிரசாதமாக உட்கொள்வர், எல்லோரும் இதனைத் தயாரித்துப் படைத்து அருந்தலாம்.

**பானகம்**

வெல்லம்கலந்த தண்ணீர், ஏலக்காய் முதலியன இட்டு, சுவையும், மணமும் உடையதாகத் தயாரித்துப் படைத்து உண்ணலாம். காவடி எடுத்து வழிபடுதல் இவ்வம்மைக்கு மிக உகந்ததாகும்.

### மாரியம்மையின் சிறந்த தலங்கள்:

**தஞ்சாவூர் மாரியம்மன்**

தஞ்சைக்குத் தென்கிழக்கில் மிகப் பெரிய ஆலயத்தில் அன்னை மாரியம்மன் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். புகழ்பெற்ற தெய்வமாகவும் மாரியம்மன் விளங்கி வருகிறார்.

இராஜராஜ சோழனால் இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தனின் மனைவியின் பொருட்டுக் கட்டப்பெற்ற மாரியம்மன் ஆலயம் சிங்காளாச்சியம்மன் கோயில் எனப்படும். இது செங்களாச்சி எனத்திரிந்து செங்கமல நாச்சியார் கோயில் எனவும் வழங்குகிறது. தஞ்சாவூரில் இராசப்பா நகரின் தென்புறம் உள்ளது.

மாரியம்மன் எழுந்தருளியுள்ள சிறப்புடைத் தலங்களாக சமயபுரம், ஒழுகைமங்கலம், வலங்கைமான், சென்னை திருவேற்காடு என பல தலங்கள் உள்ளன.

ஈரோடு பெரியமாரியம்மன், சத்தியமங்கலம் பண்ணாரி மாரியம்மன், சேலம் கோட்டை மாரியம்மன், செவ்வாய்பேட்டை மாரியம்மன், குகைமாரியம்மன், அம்மாப்பேட்டை மாரியம்மன் என வழிபட்டு வருகின்றோம். நம் காவல் தெய்வமாக, நோய் நீக்கி வாழ்வளிக்கும் மகாசக்தியாக என்றென்றும் மாரித்தாயை வழிபட்டு வாழ்வோம்.

★ ★ ★

## வாசகர் எண்ணங்கள்

ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களின் ''நினைப்பது ஒன்று, கேட்பது ஒன்று'' கவிதை மிகவும் அருமை. அருளாளர்கள் போல் நடிக்கின்ற போலி பக்தர்களைப் படம்பிடித்துக் காட்டியது அக்கவிதை.

*- ஏ.வி. ராஜகோபால், சென்னை - 87.*

பழநித் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாவையொட்டி ஜூலை ''திருக்கோயில்'' இதழில் ''பதினெண் சித்தர்கள்'' வரலாறு தொகுத்து வழங்கியமைக்கு என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


*- பேராசிரியர் மணிவாசகம், சென்னை - 29*

''அதிசயம் அநேகமுற்ற பழநிமலை'' அற்புதமான கட்டுரை. பழநி முருகனைத் திருக்கோயில் இதழ் வழியாக கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன்.

*- கமலா, கோவை -10.*

# மாரியம்மனை பணி மனமே!

- கவிஞர் ஆற்றலரசு



அன்னை அபிராமி மதுரை மீனாட்சி
அகிலம் தனைக்காக்கும் காட்சி - நெஞ்சில்

அன்புக் கருமாரி நாளும் உருமாறி
அருளைத் தருகின்ற காட்சி - நல்ல

சமயம் எதிர்பார்த்து உதவும் அன்பாலே
சமய புரத்தாளின் ஆட்சி - வெள்ளை

இமயப் புகழ்தன்னை இங்கு குவிக்கின்ற
துர்க்கை அம்மனின் மாட்சி!

துதிக்கும் பேர்கட்குத் துயரை மாய்க்கின்ற
தெய்வ வடிவமே அன்னை - தன்னை

மதிக்கும் மாந்தர்க்குப் பயனைத் தருகின்ற
மங்கை உருவமே தெய்வம் - பெண்

பதியைத் தொழுதாலும் பழகி வந்தாலும்
பாசம் தருவதும் பெண்மை - வாழ்வில்

கதியும் இல்லாத பலரைக் காக்கின்ற
காவல் தெய்வமே உண்மை!

வடிவம் பலவாகி வாழ வைக்கின்ற
வடிவு கொண்டவள் அம்மா! - உலகில்

முடிவு இல்லாமல் முலம் இல்லாமல்
முன்னே வந்ததோ சோதி - பொழுது

விடிந்து தீருமெனக் கரங்கள் நிதங்கூப்பி
வணங்கி வருவதே நியதி - மனம்

படிந்து நிலைக்கின்ற பக்தர் நெஞ்சினில்
பலவும் செய்பவள் தாயே!

# நைவேத்தியப் பிரசாதம்

- டாக்டர் டி. செல்வராஜ்

''தாரோட வாழை - தலைவாழை நூறு
காயோட வாழை - கருவாழை நூறு
பூனைத்தலை போல - பொரி உருண்டை நூறு
எலித்தலை போல - எள்ளுருண்டை நூறு
ஆனைக்காது போல - அதிரசங்கள் நூறு
அத்தனையும் சேர்ந்து - அமோக மாம்பூசை
சித்தி விநாயகரும் - சினந்தணிந்தே வரந்தருவார்.''

உண்மைதான். விநாயகர் போசனப் பிரியர். அவருக்கு நூற்றுக்கணக்கான உணவுப் பொருள்களைப் படைத்தால், நமக்கு அளவற்ற நற்பயன்களை அருளுவார்.

விநாயகர் சதுர்த்தியன்று அவருக்கு 21 வகைப்பட்ட உணவுப் பொருள்களை நிவேதனம் செய்ய வேண்டும் என்பது, நூற்றாண்டுகளாக இருந்து வருகின்ற ஒரு பாரம்பரிய விதி. இவற்றைப் ''பக்கரை விசித்திர மணி'' என்ற திருப்புகழில் தொகுத்துப் படைக்கின்றார் அருணகிரிநாத சுவாமிகள். அவை 1. கரும்பு 2. அவரை 3. பழவகைகள் 4. சர்க்கரை 5. பருப்பு வகைகள் 6. நெய் 7. எள் 8. பொரி 9. அவல் 10. துவரை 11. இளநீர் 12. தேன் 13. பயறு 14. அப்பம் 15. பச்சரிசி 16. பிட்டு 17. வெள்ளரிப்பழம் 18. அரிசியை இடித்துச் செய்கின்ற மோதகம் (கொழுக்கட்டை), இடியப்பம் முதலியன 19 கிழங்கு வகைகள் 20 அன்ன வகைகள் (சித்தரான்னம்) 21 கடலை வகைகள் என்பன.

விநாயகருக்குப் படைக்கும்போது, எண்ணத் தகுந்த உணவுப் பொருள்கள் அனைத்தும் 21 என்ற எண்ணிக்கையில் இருப்பது உத்தமம்.

ஆகவே, விநாயகருக்கு அதிகமான எண்ணிக்கையுடைய உணவுப் பொருள்கள் படைக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

**மிகப் பெரிய நிவேதனம் :**

விநாயகருக்கு மிகவும் விருப்பமானது மோதகம். விநாயகர் சதுர்த்தியன்று, பிள்ளையார்பட்டி கற்பக விநாயகருக்கு, மிகப் பெரிய மோதகத்தைச் செய்து படைக்கின்றனர்.

பக்தர்கள் பலர் இரண்டு பதினெட்டுப்படி அரிசியை இடித்து மாவாக்குகின்றனர். அடுத்து, ஒரே மோதகத்தை உருவாக்குகின்றனர். ஒரு ''விஸ்வரூப மோதகம்'' காட்சி தருகின்றது. இதைப் பத்துப் பேர்கள் ஏந்தி வந்து விநாயகரின் திருமுன் படைக்கின்றனர். பூசைக்குப் பிறகு அதைப் பிரசாதமாகப் பக்தர்களுக்கு வழங்குகின்றனர்.

இவ்வளவு பெரிய நிவேதனப் பொருள் பிள்ளையார்பட்டியைத் தவிர வேறு திருத்தலங்களில் படைக்கப்படுவதில்லை எனலாம். பெரிய மோதகம், பெரிய பிள்ளையாருக்கு ஏற்ற நிவேதனமே!

**நைவேத்தியம் - விளக்கம்:**

இறைவனின் திருமுன் பலவிதமான உணவுப் பொருள்களை நிவேதனம் செய்வது ''நைவேத்தியம்'' எனப்படும்.

''நைவேத்தியம்'' என்ற வடசொல்லுக்கு ''அறிவிக்கின்றேன்'' என்பது பொருள்.

இறைவன் நமக்குப் பலவிதமான உணவுப் பொருள்களை அருளுகின்றான். உயிர் வாழ்வதற்குரிய அடிப்படைத் தேவையே உணவுதான். அவன் அருளால் கிடைத்த உணவை அவனது திருமுன் நிவேதித்து, நமது அன்பினை - பக்தியினை - நன்றியினை அறிவிப்பதே ''நைவேத்தியம்''.

இறைவனுக்குப் படைக்கப்படுகின்ற நைவேத்தியம் மிகவும் உயர்வானது; புனிதமானது. பூசைக்குப் பிறகு பக்தர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படுகின்ற நைவேத்தியத்தைப் 'பிரசாதம்' என்று வழங்குவது வழக்கம்.

தமிழில் நைவேத்தியத்தைப் படையல், திருவமுது, காணிக்கை என்றெல்லாம் கூறுகின்றனர்.

பழைய தமிழில் படையலைப் ''பலி'' என்ற சொல்லால் வழங்கினர். அதாவது இறைவனுக்குச் சார்த்தப்படுகின்ற பொருள்களும், படைக்கப்படுகின்ற

பொருள்களும் ''பலி'' என்ற சொல்லால் குறிக்கப் பட்டன. இறைவனைப் பூக்களால் அலங்கரிப்பதைப் ''பூப்பலி தருதல்'' என்றும், ஆடு, கோழி முதலிய வற்றைப் பலியிடுவதை ''உயிர்ப்பலி தருதல்'' என்றும் கூறினர்.

**வகைகள்:**

நிவேதனம், இறைச்சி நிவேதனம், இறைச்சி யல்லாத பிற உணவுப் பொருள் நிவேதனம் என்று இருவகைப்படும். இவற்றுள் இறைவன் திருமுன் உயிர்ப்பலி தந்து, இறைச்சியைப் பக்குவப்படுத்தி நிவேதிப்பதே மிக்க பழமை வாய்ந்தது. ஆகவே, ஏதேனும் ஒன்றைப் படைப்பதையே ''பலி'' என்ற சொல்லால் வழங்கினர். எல்லா நிவேதனப் பொருள் களுக்கும் ''பலி'' என்பது ஒரு பொதுப்பெயர்.

**பலிபீடம்:**

கோயில்களில், கோபுர வாயிலின் அருகில், கொடிமரத்தின் பின்னால் ''பலிபீடம்'' என்ற உறுப்பு இருக்கக் காணலாம். மிக மிகப் பழங்காலத்தில் உயிர்ப் பலி தருவதற்குத் தகுந்த இடமாக அது திகழ்ந்தது; பலி பீடம் என்ற பெயரையும் பெற்றது. உயிர்ப் பலி தருவது நிறுத்தப்பட்டிருப்பதால், அது வெறும் உறுப்பாக மட்டும் உள்ளது.

நிவேதனம் படைக்கப்படுகின்றபோது ஒரு கைப்பிடி நிவேதனம் அப்பலிபீடத்தின் மீது வைக்கப் படுவதை இப்போதும் காணலாம். எனவே, படை யலைப் படைக்குமிடம் ''பலி பீடம்'' ஆகும்.

**உயிர்ப்பலி தருதல்:**

நைவேத்தியம் என்பது மிகப் பழைய வழி பாட்டு முறை. பதினாறு வகைப்பட்ட உபசாரங்களில் இதுவும் ஒன்று. இது எந்தக் காலத்தில் தோன்றியது என்று கணித்துக் கூறமுடியாது. ஆனால், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டு முறை என்று துணிந்து கூறமுடியும்.

மிகப் பழங்காலத்தில் இறைவனின் திருமுன் பழங்கள் முதலிய இயற்கைப் பொருள்களையும், பொங்கல் முதலிய சமைத்த பொருள்களையும் நிவே தனம் செய்தனர். இவற்றை விட, உயிர்ப்பலி தந்து நிவேதிப்பதே பழமை வாய்ந்தது.

ஓர் ஆடு பலி தரப்படுகின்ற பாவனையில் நிற்கின்ற காட்சி சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்த சின்னமொன்றில் உள்ளது. இச்சின்னம் முருக வழி பாட்டைச் சார்ந்தது என்பர்.

வேலன் வெறியாட்டு என்பது முருக வழிபாட் டின் ஒரு முறை. இந்த வழிபாட்டு முறையில் ஆடு பலிதரப்பட்டது.

பழங்காலத்தில் கொற்றவையின் திருமுன் ஆடு, எருமை முதலியன பலியிடப்பட்டன.

பொதுவாக, பெண் தெய்வங்களின் முன்னிலை யில் உயிர்ப்பலி தருகின்ற வழிபாட்டு முறை முன்னர்ச் சிறப்பாக நடைபெற்றது;

மாரியம்மனின் திருமுன் உயிர்ப்பலி தந்து வழிபட்டனர். உயிர்ப்பலி தந்து வழிபடுவது இறை யருளுக்கு உகந்தது இல்லை என்பதால் இப்போது உயிர்ப்பலி தருவது தடை செய்யப்பட்டுள்ளது.

காட்டேறி முதலிய புறக்கடைத் தெய்வங்களின் திருமுன் உயிர்ப்பலி தந்து, ஊனிறைச்சியையும், மீனிறைச்சியையும் படைத்தே இப்போதும் வழிபடு கின்றனர்.

கண்ணப்ப நாயனார் நெருப்பில் பக்குவப்படுத் திய காட்டுப்பன்றியின் இறைச்சியை, தம் வாயில் மென்று சுவைத்து, மிக்க சுவையுடைய இறைச்சித் துண்டுகளைக் காளத்திநாதரின் திருமுன் படைத்தார். ஆறு நாள்களில் முத்தியும் பெற்றார்.

இறைவனுக்கு உணவுப் பொருள்களை நிவே தித்தே முத்தி பெற்ற பக்தர்களில் கண்ணப்ப நாயனார் தலைமையானவர்.

பிள்ளைக்கறியமுதை இறைவனுக்குப் படைத் தவர் சிறுத்தொண்டர்.

வலையில் கிடைத்த முதல் மீனை - தலை சிறந்த மீனை - ''இது இறைவனுக்கு'' என்று கடலிலே காணிக்கையாக விட்டவர் அதிபத்தர்.

மேற்கண்ட அனைத்தையும் ஒரே தொகுப்பாகக் காணுகின்றபோது, பக்தர்கள் தாம் விரும்பிய தெய் வங்களின் திருமுன் உயிர்ப்பலி தருவதும், பலி தந்த வற்றைப் பக்குவப்படுத்திப் படைப்பதும், காணிக்கை யாக்குவதும் பண்டைத் தமிழர்களின் அடிப்படை யான பண்பாடு என்பது தெள்ளத் தெளிவாகத் தெரி கின்றது. இந்த அடிப்படைப் பண்பாடு கிராமப்புறங் களில் இப்போதும் மாறாமல் உள்ளது.

இனி, இறைச்சியைத் தவிர வேறு வகைப் பட்ட நைவேத்தியப் பொருள்களைப் பற்றிக் காண லாம்.

### உத்தமமானவை:

இயற்கையாகக் கிடைக்கின்ற பழவகைகள், பால், நெல்லரிசி, கோதுமை, முளையரிசி முதலியன நிவேதிக்க மிகவும் உத்தமமானவை. குறிப்பாக வெள்ளை நிற அரிசியை விடச் சிவப்பு நிற அரிசி மிகவும் உத்தமம்.

இயற்கைப் பொருள்கள் தூய்மையானவை; எனவே, படைப்பதற்கு மிக உகந்தவை.

பொங்கல், தளிகை, பாயசம் முதலியன சமைத்த பொருள்கள். இவற்றைச் சமைப்பதற்கு ஈடுபாடு, ஆர்வம், முயற்சி, உள்ளத்தூய்மை, தியாக உணர்வு, கடினமான உழைப்பு, மேலான பக்தி முதலிய இயல்புகள் தேவை. எனவே, சமைத்த பொருள்களைப் படைப்பது ஓர் உச்சநிலைத் தகுதியைப் பெறுகின்றது.

கோயில்களில் நைவேத்தியங்களைச் சமைப்பதற்கென்றே மடைப்பள்ளிகளும், திருவமுது மண்டபங்களும் உள்ளன.

### பொங்கல் விழா:

பழங்கால நிவேதனப் பொருள்களில் முக்கியமானது பொங்கல்.

படைக்கப்படுகின்ற உணவுப் பொருள்கள் பல, பொங்கலின் வகைகளே.

பல தெய்வங்களுக்குரிய பொதுவான நிவேதனப் பொருள் பொங்கல்.

தெய்வங்களின் திருமுன் பொங்கலைப் பொங்கி, படைத்து, வழிபட்டு, அதை எல்லாருக்கும் பிரசாதமாக வழங்குவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வழிபாட்டு முறை.

பக்தர்கள் பொங்கலைப் பொங்கி நேர்த்திக் கடனைக் கழிக்கின்றனர். பொங்கல் சீராகவும், சீக்கிரமாகவும் பொங்கி வழிந்தால், வாழ்க்கையும், வளமாகவும், மகிழ்ச்சியாகவும் விளங்கும் என்று நம்புகின்றனர்.

சிறப்பாக உழவர்களும், பொதுவாக அனைவரும் பொங்கலைப் படைத்துச் சூரியனை வழிபடுவது பொங்கல் விழா. பெரும்பொங்கல் - மாட்டுப் பொங்கல் - காணும் பொங்கல் என்று இந்த விழாத்தொடர் முழுவதும் ''பொங்கல்'' என்ற பெயருடன் வழங்குகின்றது.

'பொங்கல்' என்பது ஒரு நிவேதனப் பொருள். இப்பெயர் ஒரு திருவிழாவுக்கே பெயராக அமைந்திருப்பது நைவேத்தியப் பொருளின் மகிமையை எடுத்துக் காட்டுகிறது. பொங்கல் விழாவைத் தவிர, நைவேத்தியப் பொருளின் பெயருடன் விளங்குகின்ற வேறு விழா இல்லை என்பது குறிக்கத்தக்கது.

### அபூர்வமான நைவேத்தியங்கள்:

பழைய கோயில்கள் சிலவற்றில் படைக்கப் படுகின்ற நிவேதனப் பொருள்கள் பல, பழமைச் சிறப்புடையவை; பரம்பரைச் சிறப்புடையவை; அபூர்வமானவை. அந்தப் பொருள்களின் பெயர்களும் அழகானவை. வழக்கத்திலும் அதிகம் பயிலாதவை. இதோ சில உதாரணங்கள்:

1. பாவாடை: இது பழைய கல்வெட்டுகளில் காணப் படுகின்ற அரிய தமிழ்ச்சொல். இது இக்காலத்திலும் வழக்கத்தில் உள்ளது. பாகு + அடை = பாகடை; (வெல்லப்) பாகினால் செய்யப்படுகின்ற அடை. ஒரு வகை அதிரசம்; 'பாகடை' என்பது காலப்போக்கில் 'பாவாடை' என்று மாறியது.
2. கும்மாயம் : குழம்பு
3. சாத்தமுது : ரசம்
4. செலசெம்பா : வெறும் அரிசிச் சோறு
5. அமிர்த கலசம்: பாசிப் பருப்பு, வெல்லம், ஏலத்தால் செய்யப்படுவது.
6. அக்கார அடிசில்: சர்க்கரைப் பொங்கல்
7. சித்திரான்னம்: பல சுவைகளும், வண்ணங்களும் கொண்ட அன்ன வகைகள்
8. தளிகை: பச்சரிசி, பாசிப்பருப்பு, வெல்லம், ஏலக்காய் என்பன கலந்து செய்யப்படுகிறது.

   தளி = கோயில். கோயில்களில் செய்யப்படுகின்ற மிகச் சிறந்த நைவேத்தியப் பிரசாதம் ''தளிகை'' என்ற பெயரைப் பெற்றது எனலாம்.
9. அப்பமுது - அப்பம்

### அதிசயமான நைவேத்தியங்கள்:

சில கோயில்களில் இயல்புக்கு மாறான - வித்தியாசமான - வியப்பான - அதிசயமான நிவேதனப் பொருள்களைப் படைக்கின்றனர். இவை குறிப்பிட்ட கோயில்களுக்கே சிறப்பாக உரியன. வேறு கோயில்களில் இவை படைக்கப்படுவதில்லை. சில உதாரணங்கள்:

1. உப்பிலியப்பன் - உப்பில்லாத பண்டங்கள்.

   இறைவனது திருப்பெயர் ஒப்பிலியப்பன் = ஒப்பில்லாத அப்பன். இப்பெயர் உப்பிலியப்பன்

என்று மருவியது. இப்பெயருக்குத் தகுந்தபடி, அவனுக்குப் படைக்கப்படுகின்ற உணவு வகைகள் உப்பில்லாதவை!

2. விராலிமலை - முருகன் - சுருட்டு.

3. திருவரங்கம் - துலுக்கநாச்சியார் - ரொட்டி, வெண்ணெய்

4. திருக்குற்றாலம்: குற்றால நாதருக்கும், குழல்வாய் மொழியம்மைக்கும் வற்றாத அருவிநீர் ஒலியால் மாறாத தலைவலி உள்ளது. அதனால் நாதருக்கு நிவேதனம் சுக்குக் கஷாயமாம்!

5. வடக்குப்போரூர்: பத்துவிதமான மூலிகைகள் கலந்த ஒரு வகைக் கஷாயம்.

6. திருவாரூர்: தூதுவளைக் கீரை; பாகற்காய்

7. குணசீலம்: தேங்காய்த் துருவல்.

## வழக்கமான நைவேத்தியங்கள்:

கோயில்களில் வழக்கமாகப் படைக்கப்படுகின்ற நைவேத்தியங்கள் வருமாறு:

1. அன்ன வகைகள்:

1. சுத்தான்னம் 2. எள் அன்னம் 3. தயிர் அன்னம் 4. பாலன்னம் 5. கோதுமை அன்னம் 6. அக்கார அடிசில் 7. வெண்பொங்கல் 8. சர்க்கரைப் பொங்கல் 9. தேங்காய்ச் சாதம் 10. புளி சாதம் 11. எலுமிச்சை சாதம் 12. நார்த்தம்பழச் சாதம் 13. சில காய்கறி வகைகள் முதலியன.

2. பட்சண வகைகள்:

1. அப்பம் 2. வடை 3. அதிரசம் 4. பிட்டு 5. முறுக்கு 6. லட்டு 7. தோசை 8. அவல் 9. பொரி 10. எள் ளுருண்டை 11. கொழுக்கட்டை 12. சுழியன் 13. சுண்டல் 14. பாயசம் முதலியன.

## புகழ்பெற்ற நைவேத்தியங்கள்:

நைவேத்தியப் பொருள்கள் சில, திருத்தலங்கள் சிலவற்றிற்குச் சிறப்பாக உரியன.

1. மோதகம் - பிள்ளையார் பட்டி
2. பஞ்சாமிர்தம் - பழனி
3. கற்கண்டு பொங்கல்; களி - சிதம்பரம்
4. லட்டு - திருப்பதி
5. காஞ்சிபுரம் இட்லி - காஞ்சி வரதராசர் கோயில்
6. தோசை - அழகர் கோயில்
7. தினை மாவு - வைத்தீசுவரன் கோயில்
8. நெய் - சபரிமலை
9. முனையதரன் பொங்கல் - திருக்கண்ணபுரம்

## விருப்பமான நைவேத்தியங்கள்:

ஒவ்வொரு தெய்வத்திற்கும் பிடித்தமான நைவேத்தியங்கள் இருக்கின்றன. ''இந்தத் தெய்வத்திற்கு இந்த நைவேத்தியம் விருப்பமானது'' என்ற குறிப்புகளைப் புராணங்களாலும், சகஸ்ரநாமங்களாலும், பாராயணப் பாடல்களாலும் அறிய முடியும். அந்தத் தெய்வத்தை வழிபடுகின்றபோது, அதற்கு விருப்பமான நைவேத்தியம் பூசையில் நிச்சயம் இடம்பெற வேண்டும்.

பெரும்பாலும், ஒரு தெய்வத்திற்குரிய நைவேத்தியத்தை மற்றொரு தெய்வத்திற்கு மாற்றிப் படைப்பது தவறு.

தெய்வங்களுக்குப் படைக்க வேண்டிய நைவேத்தியங்கள் சிலவற்றை இனிக் காணலாம்.

1. விநாயகர் - மோதகம்
2. நாராயணன் - அக்கார அடிசில், தளிகை
3. கிருஷ்ணன் - வெண்ணெய்
4. மாரியம்மன் - கூழ்
5. அனுமன் - உளுந்து வடை.

1. அம்பிகைக்குரிய நைவேத்தியம்

1. ஞாயிறு - சர்க்கரைப் பொங்கல்
2. திங்கள் - பால் சாதம்
3. செவ்வாய் - வெண்பொங்கல்
4. புதன் - கதம்ப சாதம்
5. வியாழன் - எலுமிச்சை சாதம்
6. வெள்ளி - பால் பாயசம்
7. சனி - புளிசாதம் அல்லது தேங்காய் சாதம்

2. நவக்கிரகங்கள்

1. சூரியன் - சர்க்கரைப் பொங்கல் (சூடு ஆறாதது)
2. சந்திரன் - பால் பாயசம் (சூடு ஆறியது)
3. செவ்வாய் - பொங்கல்
4. புதன் - புளி சாதம்
5. குரு - தயிர் சாதம்
6. சுக்கிரன் - நெய்ப் பொங்கல்
7. சனி - எள்ளுச்சாதம்
8. ராகு - உளுந்து சாதம்
9. கேது - சித்திரான்னம்

**பெயர்கள்:** தெய்வங்களுக்கு விருப்பமான நைவேத்தியங்கள், அவர்களுடைய பெயர்களுடன் வழங்குகின்றன.

1. எருக்கனாங் கொழுக்கட்டை:

எருக்கன் = எருக்கம்பூவை விரும்பி ஏற்கின்ற விநாயகர். விநாயகருக்கு விருப்பமானது ''எருக்கனாங் கொழுக்கட்டை''.

2. தலச்சிறப்புடைய நைவேத்தியங்களின் பெயர்கள்:

1. திருப்பதி லட்டு
2. காஞ்சிபுரம் இட்லி
3. சபரிமலை நெய்

3. நாள் சிறப்புடைய நைவேத்தியம்

1. திருவாதிரைக்களி

இவ்வாறு நைவேத்தியங்களின் சிறப்புப் பெயர்கள் சில, அவற்றின் மகிமைகளை நுட்பமாக உணர்த்துகின்றன.

### ஆயிரம் காளியம்மன் : ஆயிரம் நைவேத்தியம்

நாகூருக்கும், காரைக்காலுக்குமிடையில் திருமலைராயன் பட்டினத்தில் ஆயிரம் காளியம்மன் கோயில் உள்ளது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மூன்று தினங்கள் இவளை வழிபடுகின்றனர். அப்போது, ஆயிரம் வாழை, ஆயிரம் மாம்பழம், ஆயிரம் முறுக்கு, ஆயிரம் அதிரசம் என்று இவ்வாறு படைக்கப்படுகின்ற பொருள்கள் அனைத்தையும் ஆயிரக்கணக்கில் படைத்து வழிபடுவது ஓர் அதிசயம். அடுத்த வழிபாடு கி.பி. 2002 ஆம் ஆண்டு நடைபெறும். இந்த ஒரு தலத்தில்தான் இவ்வாறு ஆயிரக்கணக்கான நைவேத்தியப் பொருள்கள் படைக்கப்படுகின்றன. நைவேத்திய வழிபாட்டு முறைகளில் இதுவும் ஒன்று.

### புராண வரலாறுகள் - நைவேத்தியங்கள்:

சில நைவேத்தியங்களின் பின்னணியில் அழகான, அருமையான புராண வரலாறுகள் திகழ்கின்றன. சிறப்பான அந்த நைவேத்தியங்கள் புராண வரலாறுகளைப் பிரதிபலிக்கின்றன. இடச்சுருக்கம் கருதி இரண்டு வரலாறுகளை மட்டும் இங்குக் காணலாம்:

### (1) முனையதரையன் பொங்கல்:

முனையதரையன் என்பவன் பரம வைணவ பக்தன். இவன் திருக்கண்ணபுரம் நீலமேகப் பெருமானுக்குப் பொங்கலைப் பொங்கித் தினமும் படைத்து வந்தான். எம்பெருமானும் அதனை ஏற்று மகிழ்ந்தார்.

திருக்கண்ணபுரத்தில், அர்த்தயாமத்தில், பொங்கல் இப்போதும் நிவேதிக்கப்படுகிறது. பழங்காலத்தில் முனையதரையன் நிவேதித்த பொங்கல் இது என்பதால் இதற்கு ''முனையதரையன் பொங்கல்'' என்பது பெயர்.

முனையதரையன் பொங்கலை 'ஐந்து- மூன்று- இரண்டு' என்றும் வழங்குவர். ஐந்து பங்கு அரிசியும், மூன்று பங்கு பருப்பும், இரண்டு பங்கு நெய்யும் கலந்து செய்யப்படுகிறது இந்த அருமையான பொங்கலாம்.

பக்தர்கள் பக்திக்கனலில் ஐந்து புலன் உணர்வுகளையும் - மூன்று மலங்களையும் இரண்டு வினைகளையும் வேகவைத்து, அன்பு மனம் பொங்க, பக்தி மணம் பொங்க இறைவனின் திருமுன் படைக்கின்றனர் என்பது முனையதரையன் பொங்கலின் உட்பொருள்.

### (2) பிள்ளைக்கறியமுது:

பல்லவ மன்னனின் படைத்தளபதியார் பரஞ்சோதியார். இவர் திருச்செங்காட்டங்குடியில் தினமும் ஒரு சிவனடியாருக்கு அமுது படைத்து, பின்னர்த் தாமும் உண்டு மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள், சிவபெருமானே ஓர் அடியாராகிப் பரஞ்சோதியாரிடம் வந்து பிள்ளைக்கறியமுதை வேண்டினார். மனம் தளராத, உடல் நடுங்காத பரஞ்சோதியார் தம் ஒரே மகன் சீராளதேவனைத் தம் மனைவியின் துணையோடு அரிந்து பிள்ளைக்கறியமுதைப் படைத்துச் சிவனடியாரின் அதிசய விருப்பத்தை ஆர்வத்துடன் நிறைவேற்றினார்.

இவ்வாறு யாரும் செய்ய முடியாத சிறந்த சிவத்தொண்டு புரிந்த பெருந்தொண்டர் ''சிறுத்தொண்டர்'' என்ற பெரும்பேரைப் பெற்றார்; பெரும் பேறையும் பெற்றார்.


பச்சரிசி, பாசிப் பருப்பு, வெல்லம், தேங்காய், நெய், மிளகு, சீரகம், சுக்கு, கிராம்பு, ஏலக்காய், ஜாதிக்காய் என்ற இவற்றைக் கலந்து செய்த 'பிள்ளைக்கறியமுது' ஒன்றை இன்றும் கோயிலில் படைக்கின்றனர்.

மகப்பேறில்லாத மகளிர் ஒவ்வொரு மாதமும் பரணி நட்சத்திரத்தன்று விரதமிருந்து, சித்திரையன்று கோயிலுக்கு வந்து பிள்ளைக்கறியமுதப் பிரசாதத்தை உண்டால் மகப்பேறு நிச்சயம் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

நைவேத்தியப் பிரசாதங்கள் பல, பக்தர்களுக்கு அளவற்ற நற்பலன்களைத் தருகின்றன. எனவே அவை மிக்க மகிமையுடையன.

★★★

திருமாளிகைகளில் திருமாலுக்கு நைவேத்தியம் படைக்கின்றபோது, ஸ்ரீஆண்டாள் அம்மையார் அருளிய திவ்ய பாசுரங்களை இசைப்பது வழக்கம். அவை வருமாறு:



திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் ஆனித் தேரோட்டம் 13.7.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் தேர் வடம் பிடித்து இறையருளைப் பரவி மகிழ்ந்தார்கள்.

நாறு நறும்பொழில்
மாலிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறு தடாவில் வெண்ணெய்
வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறு தடாநிறைந்த
அக்காரஅடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான்
இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ?

*பொருள்:* மணம் நிறைந்த திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியுள்ள அழகருக்கு அடியேன் வாய்நேர்ந்து நூறு தடாக்களில் வெண்ணெய் வணங்கிப் படைத்தேன். இன்னும் நூறு தடாக்களில் அக்கார அடிசிலைப் படைப்பதாக வாய்நேர்ந்தேன். திருமகளைத் திருமார்பிலே ஏந்திய அவன் இன்றே வந்து இவற்றை ஏற்றுக்கொள்வானா?

இன்றுவந்து இத்தனையும்
அமுதுசெய் திடப்பெறில்நான்
ஒன்றுநூ றாயிரமாக்
கொடுத்துப்பின்னும் ஆளும்செய்வன்
தென்றல் மணங்கமழும்
திருமாலிருஞ் சோலைதன்னுள்
நின்றபிரான் அடியேன்
மனத்தேவந்து நேர்படிலே.

*பொருள்:* மணம் கலந்த தென்றல் தவழ்கின்ற திருமாலிருஞ்சோலையில் வீற்றிருக்கின்ற அழகன் எனது மனத்தில் இன்று வந்து எழுந்தருளி, நான் படைத்த வெண்ணெயையும் அக்கார அடிசிலையும் அமுது செய்தருளுவான். அப்போது நான் மேலும் நூறாயிரம் தடாக்களில் திருவமுது படைப்பேன். அவனுக்கு அடிமை செய்வேன்.

★ ★ ★

# பெரியாழ்வார்

- எம். சிவப்பிரகாசம்

தாம் வணங்கும் கடவுளரிடம் ஆழ்ந்த பக்தி செய்து அமைவதோடன்றி அவர்களை அனுபவித்து அவர்களோடொன்றியும் வாழும் பேறு பெற்றவர் களுள் சைவசாரியருள் மணிவாசகரையும் ஆழ்வார் களுள் பெரியாழ்வாரையும் எடுத்துக்காட்டாகக் கூற லாம்.

மகாகவி பாரதியார் கண்ணனையும், கண்ணம் மாவையும் சேவகனாய் தோழனாய், காதலியாய், காதல் மகனாய், சித்தரித்துள்ளதை ஓரளவு அறிவோம்.

கண்ணனையே தம் அன்பு மகனாய் மருமக னாய்ப் பெற்ற பெரியாழ்வாரின் பாசுரங்கள் சிலவற்றுள் புகுந்து அவர் பெற்ற அனுபவங்களை நாமும் பெற முயல்வோமாக.

ஸ்ரீவில்லிப்புத்தூர் வடபத்ரசாயிக்கு திருமாலை கட்டும் பணி ஒன்றையே மேற்கொண்டு வந்த நம் பெரியாழ்வார் என்ற விஷ்ணு சித்தர் மதுரை மன்னர் மறுமைக்கு வழிகேட்டு அமைத்த பொற்கிழியை அந்த நாராயணன் அருளால் அந்த நாராயணனே வழி எனக்கூறிப் பொற்கிழி பெற்று மன்னனால் பெரிதும் பாராட்டப்பட்டு சிறப்புச் செய்யப்படுகிறார். மன்னர் அவரை யானையின் மேல் ஊர்வலமாக அழைத்துச் செல்வதை அந்த நாராயணனே இலக்குமி தேவி சமேத ராக ஆகாயத்தில் எழுந்தருளிக் கண்குளிரக் காண்கின் றான். அத்துடன் ஆழ்வாரையும் காணச் செய்கின்றான்.

ஆழ்வாருடைய நெஞ்சம் விம்முகிறது. ஆகா! கலையறிவு சற்றுமில்லாத என்னை இந்தச் சிறப்புக் கெல்லாம் ஆளாக்கியதுடன் அச்சிறப்புக்களைக் காண வும் எழுந்தருளி காட்சியளிக்கின்றானே! என்னே என் பேறு என்று களிக்கின்றார்.

அடுத்தகணம் அவருடைய கண்களும் சிந்தை யும் அவனுடைய அழகை - எழிலை சௌலப்பியத் தையும் கண்டும் எண்ணியும் மகிழ்கின்றன.

இத்தனை அழகாக எளிமையாக என் முன் தோன்றுகிறானே - கண்ணேறு பட்டுவிடாதா என்று கவல்கிறார். தம் முன்னாள் காணப்படுபவன் இறைவன் என்ற எண்ணமே மறந்து விடுகிறது. அவனைத் தன் குழந்தையாகவே எண்ணுகிறார். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதல் ஆயிரத்தின் முதல் பாசுரமாக வெளிப்படுகிறது ஆழ்வாரின் நெஞ்சம்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு.

இப்பொழுது அவர் தன் முன் கண்டவனை - கண்ணனை - எல்லாம் வல்ல இறைவனை கண்ணன் என்ற சின்னக் குழந்தையாகத்தான் காண்கிறார் - அனுபவிக்கிறார்.

ஆகவேதான் இக் குழந்தைக்குக் கண்ணேறு படாமல் இருக்க வேண்டும் - பல்கோடி நூறாயிரம் ஆண்டு வாழவேண்டும் என்று வாழ்த்துக் கூறுகிறார். அடுத்த கணம் அவனுடைய வீரத்தோள்களையும் கம்சன், சாணூரன், முஷ்டிகன் ஆகியோருடன் பொருது வென்ற காட்சிகளும் நினைவுக்கு வருகின்றன. ஆகவே தான் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா; அவன் சிறுவனாயினும் அவனுடைய வீரம் மிக்க செயல்களை யும் ஒருங்கே நினைவு கூறுகிறார்.

கண்ணனைக் குழந்தையாகவே அனுபவித்துப் பெரியாழ்வார் அருளியுள்ள பாடல்கள் பலப்பல. அவற்றுள் மேலும் சிலவற்றைக் காண்போம்.

கண்ணனுக்குத் தூளி கட்டி துயிலச்செய்ய கிடத்தியிருக்கிறார்கள். ஆனால் அவனோ

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந்தேன் நங்காய்!

ஆழ்வார் தம்மைத் தாயாகவே எண்ணிக் கொள் கிறார். ஐயோ இது என்ன பிள்ளை? தூளியில் கிடத் தினால் உதைத்துக் கிழிக்கிறான். இடுப்பில் எடுத்து வைத்துக்கொண்டால் இடுப்பு முறிகிற மாதிரியல்லவா இருக்கிறது. போகட்டும் சற்று நெருக்கி அணைத்துக் கொள்ளலாமென்றால் நெஞ்சையல்லவா கனக்கச் செய்கிறது. ஆகவே இது என்ன மாயப் பிள்ளை? இவன் தன்மைகளை நான் அறிய முடியவில்லையே. ஏதேனும் தீங்கு வந்துவிடுமோ. இதனையறிந்துகொள்ள போதிய ஞானமின்றி நான் நைந்து கொண்டிருக்கிறேனே என்று மறுகுகிறது ஆழ்வார் உள்ளம்.

தொடர்ந்து ''கண்ணன் தன்னுடைய கால்

விரலைத் தன் வாயில் கொண்டு சுவைப்பதை "அந்த அழகை'' அவர் மட்டும் காண விரும்பாமல் அக்கம் பக்கத்திலுள்ள பெண்களையும் அழைத்துக் காணச் செய்கிறார். வாருங்கள் பவள வாயீர் வந்து பாருங்கள் என்று

சீதக் கடல்உள் எமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே
பவளவா யீர்வந்து காணீரே.

அவனைத் தொட்டிலில் இட்டு அவர் பாடும் தாலாட்டுப் பாடல்

மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னால்செய்த வண்ணச்
சிறுத்தொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ.
வையம் அளந்தானே தாலேலோ.

இன்றும் தமிழ்நாட்டுத் தாலாட்டுப் பாடல்களில் மாமனும் மாமியும் குழந்தைக்கு கொண்டுவந்த பரிசுகளைப் பற்றி வியந்து பாடுவது ஆங்காங்கே காண்கிறோமல்லவா?

இங்கே ஆழ்வாருக்கு பக்தி பரவசம். அதனால் தான் முறைகூட மறந்து போயிற்று போலும், இல்லாவிட்டால் பிரமன் கொடுத்தான் என்று கூறத்துணிவாரா?

''மாணிக்குறளனே'' ஆகா! என்ன காரியம் செய்து விட்டேன். குறளன் என்று அவனைக் கூறி விட்டேனே. அப்பாடல் நிறைவுறு முன்னயே வையமளந்தானே (திரிவிக்கிரமன்) என்று நிறைவு செய்துவிட்டார்.

அம்புலிப்பருவம், செங்கீரைப்பருவம் சப்பாணிப் பருவம், தளர் நடைப்பருவம், அச்சோப்பருவம் - இப்படியாக அவனுடைய கல்யாண குணங்களையெல்லாம் எண்ணி அவர் அருளிய திருமொழிப்பாடல் நினைந்து நினைந்து மகிழற்குரியன.

நான் உட்கார்ந்திருக்கும்போது நான் அறியாதவாறு அவன் என் பின்புறமாக வந்து தழுவி மகிழ்விக்கிறானே! இதனை நீங்களும்தான் மனக்கண் முன் நிறுத்தி அனுபவியுங்களேன்.

கிண்கிணி கட்டிக் கிறிகட்டி கையினில்
கங்கணம் இட்டுக் கழுத்தில் தொடர்கட்டி
தங்கணத் தாலே சதிரா நடந்துவந்து
என்கண்ணன் என்னைப் புறம்புல்குவான்.
எம்பிரான் என்னைப் புறம்புல்குவான்.

மானுடனாகிய எனக்கு இத்தனை பேற்றையும் பெருமையையும் வழங்குகின்றானே. பலர் வீட்டிலும் சென்று நீ பாலையும் வெண்ணையையும் உண்டாய் என்று குறைகேட்டு உன்னை ஆனிரை (பசுக்கூட்டம்) மேய்க்க அனுப்பிவிட்டேனே. உன்னுடைய கரிய திருமேனி வாடிவிட்டதே என்று புலம்புவார்.

ஆனிரை மேய்க்கநீ போதி
அருமருந் தாவ தறியாய்
கானகம் எல்லாம் திரிந்துஉன்
கரிய திருமேனி வாட
பானையிற் பாலைப் பருகிப்
பற்றாதார் எல்லாம் சிரிப்ப
தேனில் இனிய பிரானே
செண்பகப் பூச்சூட்ட வாராய்.

என்று அங்கலாய்ப்பார்.

பின்னும் ஆச்சிமார்கள் அவன் செய்த சேஷ்டைகள் பலவற்றையும் வெண்ணை, தயிர், தின்பண்டம் போன்றவற்றை அவன் திருடி உண்டுவிட்டான் என்று ஒருவர் பின் ஒருவராகக் கூறுகின்றனர். இக்குறைகளையெல்லாம் தம்முடைய திருமொழியில் நிறைவாக அளிக்கிறார் பெரியாழ்வார். அதனைப் பலரும் பலகால் பயின்று அனுபவிப்பதே பெரியாழ்வாருக்கு நாம் செய்ய வேண்டிய பக்திக் கடனாகும்.

குழந்தைக் கண்ணன் பற்றி அயலார் கூறியவற்றை செவிமடுத்த நிலையில் இவன் மனைதொறும் திரியாமல் செய்வதற்கு எண்ணி அவனைக் கன்றுகளை மேய்ப்பதற்கு கானகத்திற்கு அனுப்பி வைப்பதுதான் சரியான வழி என்று அப்படியே செய்தும் விடுகிறாள் அந்தத்தாய். ஆனால் அப்படி அனுப்பிய பிறகு ''நான் என்ன பாவம் செய்துவிட்டேன்'' என்று ஏங்கி நிற்கும் தன்மையை

''குடையும் செருப்பும் கொடாதே தாமோ
தரனைநான்
உடையும் கடியன ஊன்று பரற்குடை
கடியவெங் கானிடைக் காலடி நோவக்
கன்றின்பின்
கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன்
எல்லே பாவமே.

பெரியாழ்வார் அனுபவித்த கண்ணன் பற்றிய மிகச் சில பாடல்களே இங்கே இடம் பெற்றுள்ளன. அனைத்தையும் நீங்கள் அனுபவிக்க வேண்டுமென்றால் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தை - பெரியாழ்வார் பாடல்களனைத்தையும் ஒருமுறையேனும் பயில வேண்டாமா? எளிய இனிமையான நெஞ்சை உருக்கும் பாடல்கள் அவை.

★ ★ ★

# சனீஸ்வரன்

நவக்கிரகங்களின் நாயகன் சூரியன், அவனுடைய புத்திரன் சனீஸ்வரன்.

சூரியன் 'துவிஷ்டா' என்ற முனிவரின் மகளாகிய சுவர்ச்சலாதேவியை திருமணம் செய்து கொண்டார். சூரியனுக்கும், சுவர்ச்சலாதேவிக்கும் வைவஸ்த மனு, யமதர்மராஜன் என்ற இருமகன்களும், 'யமுனை' என்ற ஒரு பெண்ணும் பிறந்தனர். நாளடைவில் சுவர்ச்சலாதேவியால் சூரியனின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் போயிற்று. இக்கட்டான இந்தநிலைமையை சமாளிக்க தன் நிழலையே பேரழகு வாய்ந்த பெண்ணாக மாற்றினாள். தன் சாயலிலிருந்து தோன்றியதால் சாயாதேவி எனப்பெயரிட்டாள். சுவர்ச்சலா தேவி, தான் தவம் செய்யப் போவதாக, சாயாதேவியிடம் கூறி, தான் வரும்வரை தன் குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படியும், தன் கணவரிடமும் அன்புடன் நடந்துகொள்ளும்படியும், தன்னையார் என்று காட்டிக்கொள்ளாமல் இருக்கும்படியும் கூறிவிட்டு தன் தாய்வீடு சென்றாள்.

சாயாதேவியும், சுவர்ச்சனாதேவி சொல்லிய படியே சூரியனிடமும், குழந்தைகளிடமும் நடந்து கொண்டாள். சூரியதேவனும் தன்மனைவி சுவர்ச்சலா தேவி என்றே நினைத்து அவளிடம் பழகிவந்தார். நாளடைவில் சாயாதேவிக்கும் 'தபதீ' என்று ஒரு மகளும், 'சுருதச்ரவஸி' சுரதகர்மா' என்ற இருமகன்களும் பிறந்தனர். 'சுருதகர்மா' என்பவரே 'சனி' என்றழைக்கப்பட்டார்.

சாயாதேவி தனக்குக் குழந்தைகள் பிறந்ததும் சுவர்ச்சலாதேவியின் குழந்தைகளை பாரபட்சம் பார்த்ததில், இதை அறிந்து யமதர்மராஜன் தன் தாயின் மாற்றத்தைத் தன் தந்தையான சூரியனிடம் சொல்லியதில், அவரும் சாயாதேவியிடம் விசாரித்ததில், அவள் மௌனம் சாதித்ததால், சூரியனுக்குக் கோபம் வந்து, அவளை அடிக்கப்போனதில், அவள் உண்மைகள் யாவையையும் கூறிவிட்டாள். இதைக் கேட்டு யமனும், சூரியனும் அவளை மன்னித்து விட்டுவிட்டனர்.

சூரிய பகவான், சுவர்ச்சலா இருக்கும் இடத்தைத் தம் ஞானதிருஷ்டியில் அறிந்தார். சுவர்ச்சலாவைக் கண்டு ஆரத்தழுவியதில் காந்த சக்தியால் இரு மகன்கள் பிறந்தனர். அவர்கள் இருவரும் அஸ்வனி தேவர்கள் என அழைக்கப்பெற்றனர்.

சூரியனின் எல்லா குழந்தைகளும் ஒவ்வொரு விதத்தில் பார்புகழும் பெருமை பெற்றனர். 'சுருதகர்மா' மட்டும் தன் இளமைப் பருவத்திலேயே மற்றவர்களுக்கு இல்லாத தனிப்பெருமை பெற்றிருந்தார். அவருடைய தீக்ஷிண்ய பார்வையைக்கண்டு அனைவரும் அஞ்சினார்கள். சாயாதேவி மட்டும் 'சுருதகர்மா' (சனியை) வால் மற்றவர்களுக்கு எந்தவித தீங்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என பயந்து, அவனை வெளியில் எங்கும் அனுப்பாமல், தன் கண்காணிப்பிலேயே 'வைத்திருப்பாள்.

ஒருசமயம் கைலாயத்தில் விநாயகப்பெருமான் பிறந்த வைபவம் வெகுசிறப்பாகக் கொண்டாட ஈரேழு லோகத்தவர்களும் கூடியிருக்கும் சமயம், சுருதகர்மா அங்குசெல்லவேண்டும் என்று அடம்பிடித்து, கெஞ்சி தன் தாயிடம் அனுமதி பெற்றுச் சென்றான். கைலாயமலையில் சுருதகர்மா நடந்து வருவதைக் கண்டுவிட்டார் ஈசன். கைலாயம் ஒரு குலுங்கு குலுங்கியது. அதை உணர்ந்த சிவபெருமான், உமையிடம், சுருதகர்மா வருவதால் 'நம் குழந்தையைக்கண்டால், குழந்தைக்குஆபத்து நேரும்'' என்று கூறினார். உமையும் உடனே தன் மகனை மடிமீது எடுத்து வைத்துக் கொண்டு, 'சக்தியின் மடிமீது இருப்பவனுக்கு சனியின் பார்வை எம்மாத்திரம்'' என்று எண்ணினாள்.

சனியின் பார்வை விநாயகர்மேல் பட்டதும் அந்தக் கணமே விநாயகர் தலை காணாமல்போனது. உமையோ பதறியவாறு ஈசனைப்பார்க்க, ஈஸ்வரரும், 'நம் மகன் விநாயகரால் அசுரசம்ஹாரம் நடைபெற வேண்டியுள்ளதால், நம்மைப் போன்ற மனிதமுகம் உதவாது; ஆதலால் முகத்தை மாற்ற வேண்டும்'' என்று உடனே பைரவரை அழைத்து, வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுத்திருக்கும் யானையின் தலையைக் கொண்டு வரச் சொல்லிக் கட்டளையிட்டார். பைரவனும் வடக்குப்பக்கம் தலைவைத்துப்படுத்திருக்கும் யானையைக் கண்டுபிடித்து தலையைக் கொண்டு வந்து அதனைப் பொருத்தியதில் அன்று முதல் விநாயகர் கஜமுகன் ஆனார். உமையோ தன் மகனுக்கு இந்நிலை ஆனதில் கோபங்கொண்டு சனிக்கு, 'இன்றுமுதல் உன்கால் ஊனமாகட்டும்', என்று சாபம் கொடுத்தாள். அன்றுமுதல் சனிக்கு ஒருகால் மட்டும் ஊனமாகித் தாங்கிதாங்கி நடக்கலானான். இதைக் கண்ட சாயாதேவி தன் மகனை சாபமிட்டதால், கோபமடைந்து விநாயகரை 'லம்போதரனாகட்டும்' என்று

சபித்தாள். அதன்படி விநாயகரும் வயிறுபெருத்து மெதுவாக நடக்கலானார்.

சனிபகவானும் தன் சகோதர சகோதரிகளைப் போலவே தானும் உன்னத நிலையை அடைய எண்ணி தன் தாயிடம் கோரினார். சாயாதேவியும் ஆசி கூறி அனுப்பி வைத்தாள்.

சனி பகவானும் காசிக்குச் சென்று, லிங்கம் ஒன்றைச் செய்து, அதனைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்தார். சனிபகவானின் பக்திக்கு மெச்சி, ரிஷப வாகனத்தில் சிவபெருமான் காட்சி தந்தார். சனிபகவானும் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து வணங்கினார். 'சுருதகர்மா! உமது பக்திக்கும் திருவுள்ளம் கொண்டோம். இன்று முதல் எனக்கு அடுத்த ஸ்தானத்தை அடைவாயாக! சனி என்றழைக்கப்பட்ட நீ, இனிமேல் 'சனீஸ்வரன்' என்று அழைக்கப்படுவாய். நீ பிரதிஷ்டை செய்து பூஜித்த லிங்கம், 'சனீஸ்வரலிங்கம்' என திருநாமம் பெறும். இந்த லிங்கத்தைப் பூஜிப்பவர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக்கப்பெறும். நவக்கிரக பரிபாலனத்தில் உமக்கு ஒப்புயர்வற்ற நிலை அளித்தோம்'', எனக் கூறி மறைந்தார். 'சுருதகர்மா' (சனி) மகிழ்ச்சியடைந்தார். பரமேஸ்வரனால் 'சனீஸ்வரன்' நவக்கிரங்களில் ஒரு சிறப்பிடத்தையும் பெற்றார்.

சர்வேஸ்வரனின் வாக்கினால் அவனுடைய ஆட்சி காலத்தில், அவரவர் பூர்வபுண்ணியத்திற்கேற்ப சோதித்து, பின்பு நலன்களை அளித்துவந்தார். அவர் சர்வேஸ்வரனிடம், ''சுவாமி! பூலோகவாசிகளை சோதிப்பது போலவே உங்களையும் சோதிக்க வேண்டும்'', என வேண்டினார். சர்வேஸ்வரன் சிரித்தார். உடனே பூலோகவாசியாக அவதரித்தார். சனீஸ்வரனிடம் உன்னால் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது' என்று கூறியது நினைவுக்கு வரவே, சுட்டெரிக்கும் நெற்றிக்கண் பெற்று, சர்வலோகங்களையும் ஆளும் சர்வேஸ்வரன், ஒரு தாமரைத் தடாகத்தில், ஒரு தாமரையின் தண்டின் அடியில் பதுங்கியிருந்து மூன்று நாழிகைக்கழித்து வெளியே வந்தார். அப்போது எதிரே சனீஸ்வரன் நின்றுகொண்டிருக்க, 'சனீஸ்வரா! உன்னால் என்னை என்ன செய்ய முடிந்தது'' என சர்வேஸ்வரன் கேட்டார். சனீஸ்வரன் பணிவுடன் ''தாங்கள் எனக்களித்த வரத்தின் மூலம், நான் பெற்ற வரம், உம்மையும் எனக்குப் பயந்து தாமரைத்தண்டின் அடியில் மூன்று நாழிகையாவது பதுங்கியிருக்கச் செய்துவிட்டது பார்த்தீர்களா'' என்று பவ்யமாகக் கேட்டார். அதற்கு சர்வேஸ்வரனும், ''நீ 'சனீஸ்வரன்' என்ற கௌரவம் அடைந்ததை உலகுக்கு உணர்த்தவே , யாம் இத்திருவிளையாடல் நடத்தினோம்'' என்று கூறி மறைந்தார்.

புலஸ்தியர் என்பவர் பிரும்மாவின் புதல்வர்களில் ஒருவர்; அவர்மகரிஷியும் ஆவார். மேலும் சப்த ரிஷிகளில் முக்கியமானவர்.

பிரம்மாவின் மனைவியாகிய சரஸ்வதிக்கு ஓர் ஆசை உண்டானது. தானும் ஒரு நதியாக மாறிப் பூலோகத்தில் பெருக்கெடுத்துப் பாய விரும்பினாள். அதனால் பூலோகம் வந்து திருவேங்கடமலைக்கு வந்து பகவானை நோக்கி கடுந்தவம் புரியலானாள்.

புலஸ்தியரும் அன்னையின் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அன்னையைக் காணாமல் எங்கும் தேடலானார். கடைசியில் திருவேங்கடமலையில் அன்னையைக் கண்டவர், அவரைத் தவத்திலிருந்து பலவாறு எழுப்பலானார். அப்படியும் அன்னை சரஸ்வதி கண்விழிக்காததால், அவர் அன்னைக்கு சாபமளித்தார். ''மகன் எவ்வளவுதூரம் அழைத்தும், கண்டு கொள்ளாத உன் தவம், பலிக்காமல் போகட்டும்'', என்றார். சரஸ்வதியும் சாபக்குரலைக் கேட்டு கண் விழித்தார். 'மகனே ஆனாலும் மகரிஷிகளில் சிறந்தவன் ஆதலால் அவன் சாபம் பலிக்கும், இனி தவம் செய்து பயன் இல்லை என்று தீர்மானித்து, 'தாயை சபித்த சண்டாளனே உன் குலம் அரக்கர்குலம் ஆகட்டும்'', என்று சாபமிட்டாள். அன்னையின் சாபப்படியே புலஸ்தியனுக்கு, 'இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை' என்ற அரக்கர்கள் குழந்தைகளாகப் பிறந்தார்கள்.

இவர்களில் இராவணன் மிகுந்த பலசாலி; சர்வேஸ்வரனிடம், தவத்தின் மூலம் பல அரிய வரங்களைப் பெற்றவன். தேவர்களையும், முனிவர்களையும் தனக்கு ஏவலாள்களாக்கினான். நவக்கிரகங்களை, அவனுடைய சிம்மாசனத்திற்கு ஏறிச் செல்லும் படிக்கட்டுகளாகப் போட்டுக் கொண்டிருந்தான். கிரகங்களின் பார்வை தன்மீது படாமலிருக்க அவற்றைக் குப்புற கவிழ்த்துப் போட்டிருந்தான்.

இராவணனை ஒழிக்க வேண்டுமென்றால் முதலில், சனீஸ்வரனின் பார்வை அவன் மீது விழ வேண்டும். இதற்கான வழியை மூன்று லோகங்களையும் சுற்றிவருபவரும், முக்காலத்தையும் உணர்ந்தவரான நாரதமுனிவர் சிந்திக்கலானார். ஒரு திட்டத்துடன் இராவணனைக் காண இலங்கைக்குப் புறப்பட்டார்.

இராவணன் நாரதரை உபசரித்தான். அவருக்கு இருக்கை அளித்தவன், தான் சிம்மாசனத்தில் அமர படிக்கட்டுகளை நெருங்கினான். அப்போது நாரதர் சிரித்தார். இராவணனும் ''ஏன் சிரிக்கிறீர்கள்'' என்று கேட்டான்.

''மகா பராக்கிரமசாலியான இராவணன், இந்த ஒன்றுக்கும் உதவாத நவக்கிரகங்களுக்குப் பயந்து, அவற்றைக் கவிழ்த்துப்போட்டு படிக்கட்டுகளாக உபயோகிக்கும் நிலையை நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது'', என்றார். ''இதில் என்ன தவறு இருக்கிறது'', என்று கேட்டான் இராவணன். அதற்கு, ''சுத்த வீரன் நேருக்குநேர் நோக்குவானே தவிர, முதுகுப் பக்கம் பார்க்க மாட்டான். நவக்கிரகங்களின் முதுகின் மீது கால்வைத்து ஏறுவதால் நீ சுத்த வீரனிலிருந்து மாறு பட்டவனாகிறாய்'', என்று நாரதர் கூறினார்.

நாரதரின் சூழ்ச்சி அறியாத இராவணனுக்குக் கோபம் வந்து, தான் சுத்த வீரன் என்பதை நிரூபிக்க, நவக்கிரகங்களை மல்லாக்காகப்படுக்கச் செய்தான். சனீஸ்வரனின் தீட்சண்யமான பார்வை அவன்மீது பட்டது. அந்தக் கணமே அவனது அழிவுக்காலம் உதயமாகி விட்டது. சீதையைக் கவர்ந்ததனால், நாளடைவில் சக்தி, பலம், வரம், அனைத்தும் மாய மாய் மறைந்தன. மலை குலைந்தாலும், நிலை குலையாத இலங்கேஸ்வர மாமன்னன் ஒரே நொடியில் நடுங்கிப் போனான். இறுதியில் ஸ்ரீராமனின் பாணத்துக்குப் பலியானான் என்பதாகும்.

நளதமயந்தி கதை அனைவரும் அறிந்ததே! நளன், சூதாட்டத்தில் தன் நாடு நகரம், சுகங்கள் அனைத்தையும் இழந்து, காடு சென்று, அங்கு தன் மனைவியைத் தனியாக விட்டுவிட்டு, கானகத்தில் 'கார்க்கோடக'னால் கடிக்கப்பட்டு, உருவம் மாறி, அயோத்தி மன்னனிடம் 'ரதசாரதி'யாக வேலைக்கு அமர்ந்தான்.

தமயந்தியோ, தனியாகத் திரிந்து, கானகத்தில் நளனைத் தேடிக் காணாமல், தன் தந்தையின் நாடு சென்று, அவரிடம் பல நாடுகளில் தேடச்சொன்னாள். ஒற்றர்கள் மூலம் நளன் இருக்குமிடம் அறிந்த மன்னன், தமயந்தியின் சொல்படி, தமயந்திக்கு மறுபடியும் சுயம் வரம் என்று அயோத்தி மன்னனுக்கு சேதி அனுப்ப, அவனும் தமயந்தியின் அழகில் மயங்கியவன் ஆதலால், குறிப்பிட்ட நாளுக்குள் சென்றடைய முடியுமா என்று ரதசாரதியான நளனிடம் கேட்க, ரதசாரதியும் ரதத்தில் ஏறி அமர்ந்தபின், குதிரைகளின் காதில் நளன் ஏதோ சொல்ல அவைகள் வாயு வேகத்தில் பறந்து சென்றதில், முதல் நாளே வந்து சேர்ந்தனர். அயோத்தி மன்னன் சுயம்வரத்திற்கான ஏற்பாடுகள் ஒன்றும் இல்லாமல் தன்னை மட்டும் அழைத்ததின் அதிசயம் என்ன என்று எண்ணினான். தனி மாளிகை கொடுத்து தமயந்தியின் தந்தை உபசரித்தார். ரதசாரதியைக் கண்ட தமயந்தி, அவன்தான் நளன் என்று அறிந்துகொண்டாள். அவனை அழைத்து, தன் மனக்கவலைகளைக் கூறி, தங்களுக்காகத்தான் சுயம்வர ஏற்பாடு என்று கூறினாள். நளனும் கண்ணீர் வடித்து கார்க்கோடகனால் கொடுக்கப்பட்ட 'அரவுரியை' அணிந்தான். தன் சுய உருவை அடைந்தவன், தமயந்தியுடன் மறுபடியும் நாட்டை ஆளும் படி பல நன்மைகளைப் பெற்றான்.

நாரதனின் மூலம், நளன் தன் மனக்கவலையைக் கூறியதில், ராஜ்யத்தை அமைச்சரிடம் ஒப்படைத்து விட்டு, க்ஷேத்திராடனம் தன் மனைவியுடன் மேற்கொண்டு, பல புனித நதிகளிலும், குளங்களிலும் நீராடினான். பல முனிவர்களின் அறிவுரையால் திருநள்ளாறு சென்று, தர்ப்பாரண்யேஸ்வரர் சந்நிதியில் கோயில் கொண்டுள்ள, ஸ்ரீ சனீஸ்வரரை ஸ்தோத்திரம் செய்து ஆராதனைகள் செய்து, அவரால் ஏற்பட்ட துன்பத்தைத் தீர்த்துக்கொள்வாய் என்றபடி, அங்கு சென்று குளத்தில் நீராடி சனீஸ்வர பகவானைக் கண்டு நெடுஞ்சாண் கிடையாக நிலத்தில் வீழ்ந்து பணிந்து, அபிஷேக ஆராதனைகள் செய்து 'எள் அன்னம்' நிவேதித்தான். சனிபகவானை திருப்தி செய்ய கறுப்பு நிற ஆடை சாத்தினான். நளன் நீராடிய குளமே இன்று 'நள தீர்த்தம்' என்ற பெயரில் சிறப்புப் பெற்றுள்ளது. நள மகாராஜனின் ஒப்புயர்வற்ற அபிஷேக ஆராதனையாலும், அலங்கார பூஜையினாலும், இணையில்லாத நாம சேவையினாலும் சனி பகவான் உள்ளம் பூரித்தார். சனிபகவான் நளனை விட்டு நீங்கினார்.

இவ்வுலகில் யார் நளனின் பேர்சொன்னாலும் சனிபகவானால் எத்தகைய துன்பமும் வராது என நளனுக்கு வரமளித்து, இப்பூவுலகில் மானிடர்கள் அனைவருக்கும் நளனின் மூலமாக தம்து வல்லமையை உணர்த்தினார் சனிபகவான்.

நளனும் திருநள்ளாற்றில் தங்கி சனீஸ்வரரையும் போகமார்த்த பூண்முலை நாயகி உடனுறை தர்ப்பாரண்யேஸ்வர நாயகனையும் மனதாரப் பிரார்த்தித்து, சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வுடன் சர்வ மங்களம் பெற்று, தனது நிடதநாடு திரும்பி மனைவி மக்களுடன் நீடூழி வாழ்ந்தான் என்பது வரலாறாகும்.

மகர ராசிக்கும் கும்பராசிக்கும் அதிபதியான சனிபகவான், நவக்கிரக மண்டலத்தில் சூரியனுக்கு மேற்கே தனுசின் உருவங்கொண்ட மண்டலத்தில் உறைகிறான்.

கோசாரத்தில் அவரவர் பிறந்த ராசிக்கு 12, 8,1 ஸ்தானங்களில் 'சனி, சூரியன், செவ்வாய், குரு' என்னும் நான்கு கிரகங்களும் சஞ்சாரம் செய்யும்போது, உயிருக்கு ஆபத்து நேருமோ என்ற சந்தேகமும், இடம் விட்டு இடம் மாற்றமும், ஓர் உத்தியோகத்திலிருந்து மற்றோர் உத்தியோகத்திற்கு மாற்றலும், அல்லது தான் வசிக்கும் ஊர், வீடு இவைகளிலிருந்து, வேறு ஊர்

அல்லது வேறு வீட்டுக்கு மாற்றலும், இருக்கும் உத்தி யோகத்திலிருந்து நீக்கப்படுதல் போன்றவைகள் ஏற் படும். பணம் அதிகமாக செலவாகுதல், திருடுபோதல் செய்தொழிலில் நஷ்டம் ஏற்படக்கூடும். சனிபகவான் அவரவர் ராசிக்கு 12,8,1ல் சஞ்சாரம் செய்யும் காலத் தில் அவருக்கு சாஸ்திரங்களில் கூறிய முறைப்படி ஜப-ஹோம-தானங்களாகிய சாந்திகளைச் செய்ய வேண் டும். இவ்வாறு 12,8,1 ராசிகளில் சஞ்சாரம் செய்யும் போது 'ஏழரை நாட்டுச் சனி' என்ற பெயரால் குறிக்கப் படுகிறார். ஏழரை நாட்டுச்சனி என்பதை ஏழரை வருடங்கள் சனியின் சாரத்தையொட்டி இந்தப் பெயர் வந்தது. அவருடைய ஜன்ம ராசியிலும் 12, 2, ஸ்தானங் களிலும் சஞ்சாரம் செய்யும் காலமே ஏழரை நாட்டுச் சனியின் காலமாகும். இந்தக் காலத்தை மிகவும் சிரமம் மிகுந்த காலம் என்பர். இக்காலத்தில் உயிருக்கே ஆபத் தான நோய்கள் ஏற்படக்கூடும் என்றும், வீணாகப் பண நஷ்டமும், பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் ஏற்படுமென்றும் ஜோதிட சாஸ்திரம் எச்சரிக்கின்றது.

'சனியைப்போல் கொடுப்பவனும் இல்லை; சனியைப்போல் கெடுப்பவனும் இல்லை' என்பது பழமொழி. ஒருவருக்கு 'பொங்கு சனிதசை' வந்து விட்டால் பொன் கொழிக்கும்; 'மங்கு சனிதசை' வந்து விட்டால் அஷ்டதரித்திரம் கூத்தாடும். பல நோய்கள் வரும். சனிக்கிழமை விரதம் இருந்து சனீஸ்வர பகவா னுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் பலவகை நன்மைகள் உண்டாகும் என்று நவக்கிரக க்ஷேத்திர புராணம் கூறுகிறது.

அர்த்தமாஷ்டம சனி, கண்டச்சனி, ஏழரை நாட்டுச்சனி எது வந்தாலும் திருநள்ளாறு க்ஷேத்திரம் சென்று, நளனால் உருவாக்கப்பட்ட நளதீர்த்தத்தில் நீராடி, தர்ப்பாரண்யேஸ்வரரையும், போகமார்த்த பூண் முலை அம்மனையும் வணங்கிவிட்டு, ஸ்ரீ சனீஸ்வரர் சந்நிதியை அடைந்து, ஓர் அகல் விளக்கில் எண்ணெய் விட்டு, அதில் எள் முடிந்த திரியிட்டு தீபம் ஏற்றி பூஜை செய்தால் துன்பங்கள் பெருமளவும் தீரும்.

திருநள்ளாறு போக முடியாதவர்கள் அர்த்த மாஷ்டம சனிகாலத்தில் அவர்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சிவாலயத்திற்குச் சென்று நவக்கிரக நாயகன் முன் எண்ணெய் விளக்கேற்றிவைத்து பூஜை செய்யவும். சனிக்கிழமைகளில் விரதம் இருக்கவும் நன்மை உண் டாகும்.

கண்டச்சனி காலத்தில் சனிக்கிழமை தோறும் விரதம் இருப்பதுடன் ஓர் இரும்பு வாணலியில் எள் எண்ணெய் விட்டு ஐந்து ஒரு ரூபாய் நாணயங்களை அதில் போட்டு யாராவது ஒருவருக்கு தானம்செய்ய நல்லது நடக்கும்.

அர்த்தமாஷ்டம சனிகாலத்தில் சனிக்கிழமை விரதம் இருப்பதுடன் எள் சாதம் கலந்து சனீஸ்வரனுக்கு படைத்து விட்டு, காகத்திற்கு அன்னமிடவும். ஓர் ஏழைக்குக் கறுப்பு ஆடை தானம் செய்யவும்.

ஏழரை நாட்டுச்சனி காலத்தில் சனிக்கிழமை தோறும் காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். குளிப்பதற்கு முன் எதுவும் சாப்பிடாமல், நீராடிய பிறகு ஆலயத்திற்குச் சென்று நவக்கிரக நாய கனை (சனிபகவானை) ஒன்பது முறை வலம் வரவும். எள் முடிச்சிட்ட திரி போட்டு எள்ளெண்ணெய் விளக்கு ஏற்றிவரவும். சனிபகவானுக்கு அர்ச்சனை செய்யவும். தொடர்ந்து நாற்பத்தியோரு சனிக்கிழமைகள் அர்ச் சனை செய்வது நல்லது. ஒரு முறையாவது திருநள்ளாறு சென்று சனிபகவானை தரிசித்து பூசித்து வருவது சிறப்பானது. சனிப்பிரதோஷம் நாள்களில் பரமேஸ் வரனுக்கும், சனீஸ்வரனுக்கும் அபிஷேக, அர்ச்சனை செய்து வந்தால் எல்லா நன்மைகளும் ஏற்படும், துன்பங்கள் விலகும்.

நளன் சரித்திரம் மிகவும் விசேஷம் வாய்ந்தது. இச்சரித்திரத்தைக் கேட்பவர்களுக்கு ஸ்ரீ சனீஸ்வரனால் ஒரு போதும் துன்பமில்லை என்று நளனுக்கு வரமளித் துள்ளதாக நளவெண்பா கூறுகிறது. சனிப்பெயர்ச்சி காலத்தில் ஆஸ்தீக அன்பர்கள் பலமேடைகளில் நள சரித்திரத்தை பாகவதர்கள் மூலம் உபன்யாசத்தை எடுத்துச் சொல்வதால் சனியின் ப்ரீதிக்குள்ளாவார்கள்.

நவக்கிரகங்கள் இந்திராதி தேவர்களையும் ஆட்டி வைக்கும் சக்தி வாய்ந்தவை. ஆனால் திருமலையில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை சரணடைந் தவர்களுக்கு நவக்கிரகங்கள் யாதொரு கெடுதியும் செய் யாமல், சகல நன்மைகளையும் செய்கின்றன என்று ஸ்ரீ வெங்கடேச ஸுப்ரபாத சுலோகம் - 19 விளக்குகிறது.

முன் ஜென்மத்தில் செய்த பாவத்திற்கு இந்த ஜென்மத்தில் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியது நியதியானாலும், மனம் உருகி மன்றாடிக் கேட்டுக் கொண்டால் பகவான் நம் கஷ்டங்களைக் குறைத்து, அதோடு கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ளும் ஆற் றலையும் அருளுகிறார்.

நல்ல நிலையில் உள்ளவர்கள் மீண்டும் மீண் டும் பகவானைத் துதித்து வந்தால், அவர்களுக்கு மேன் மேலும் சுகம் உண்டாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

*சனிபகவானுக்கான சுலோகங்கள், சனி பகவா னுக்குகந்த காயத்ரீ மந்திரம், சனிபகவான் அஷ்டோத் திர நாமாவளி, தசரதனின் சனீஸ்வர ஸ்தோத்திரம், திருஞான சம்பந்தர் அருளிய கோளறு பதிகம் என்று சனிபகவான் பலரால் துதிக்கப்பட்டுள்ளார். இவ்விவ ரங்கள் அனைத்தும் திருநள்ளாறு ஸ்தல வரலாறு நூலில் அடங்கியுள்ளன.*

* * *

# சனீஸ்வரன் 108 போற்றி

1. ஓம் அடைக்கலம் அருளும் ஐயா போற்றி
2. ஓம் அடைவதற்கு அருமையாய் நின்றாய் போற்றி
3. ஓம் அமைதியின் வடிவாய்த் திகழ்ந்தாய் போற்றி
4. ஓம் அறிவின் வடிவே போற்றி
5. ஓம் அறிவு வழங்கும் அறிஞ போற்றி
6. ஓம் அன்பர்க்கு எளியாய் போற்றி
7. ஓம் அன்பர்தம் காப்பே போற்றி
8. ஓம் அழியாப் பயன்கள் அளிப்பாய் போற்றி
9. ஓம் ஆனந்த வடிவின் ஐயா போற்றி
10. ஓம் ஆபத்தில் உதவுவாய் போற்றி
11. ஓம் ஆபத்தைத் தவிர்ப்பாய் போற்றி
12. ஓம் ஆயுள் காரகனே போற்றி
13. ஓம் ஆயுள் வளர்ப்பாய் போற்றி
14. ஓம் இரங்குவார்க்கு அருள்வாய் போற்றி
15. ஓம் ஈவதில் இணையிலாய் போற்றி
16. ஓம் ஈத்துவக்கும் வள்ளலே போற்றி
17. ஓம் ஊக்கம் உடையாய் போற்றி
18. ஓம் ஊக்கம் தருவாய் போற்றி
19. ஓம் எள்விளக்கு ஏற்பாய் போற்றி
20. ஓம் எளியோர்க்கு அருள்வாய் போற்றி
21. ஓம் எள்ளு தானம் உவந்தாய் போற்றி
22. ஓம் எள்ளுணவு ஏற்பாய் போற்றி
23. ஓம் ஏற்றம் தருவோய் போற்றி
24. ஓம் ஏழாம் கோளாய் நின்றாய் போற்றி
25. ஓம் ஏழரை ஆட்டைச் சனியாய்ப் போற்றி
26. ஓம் ஒளிவட்டத்து ஒருவ போற்றி
27. ஓம் ஒப்பேதும் இல்லாக் கோளே போற்றி
28. ஓம் ஓங்காரப் போற்றியை உகந்தாய் போற்றி
29. ஓம் கதிரவன் மகனே போற்றி
30. ஓம் கருநிற உடையாய் போற்றி
31. ஓம் கருநிறக் காதலா போற்றி
32. ஓம் கருநிறக் குடையாய் போற்றி
33. ஓம் கருமை காணா மனத்தோய் போற்றி
34. ஓம் கவலை அறியாக் காவல போற்றி
35. ஓம் கற்பூரச் சாந்து அணிந்தாய் போற்றி
36. ஓம் காக வாகனம் கொண்டாய் போற்றி
37. ஓம் காசியில் லிங்கம் பூசித்தாய் போற்றி
38. ஓம் காமம் சிறிதும் இல்லாய் போற்றி
39. ஓம் காமம் வெகுளி கடிவாய் போற்றி
40. ஓம் கால அக்கினி வடிவம் கொண்டாய் போற்றி
41. ஓம் குச்சனூர் கோயில் கொண்டாய் போற்றி
42. ஓம் குணக்குன்றென நின்றாய் போற்றி
43. ஓம் குளிகன் தன்னை ஈன்றாய் போற்றி
44. ஓம் சகலரும் போற்றும் கலியே போற்றி
45. ஓம் சஞ்சலம் தீர்க்கும் தலைவா போற்றி
46. ஓம் சனிக்கிழமை உவந்தாய் போற்றி
47. ஓம் சனிநீராடல் மகிழ்வாய் போற்றி
48. ஓம் சனிபகவானே போற்றி
49. ஓம் சாற்றப்பாடல் உவப்பாய் போற்றி
50. ஓம் சாற்றும் அடியார்க் கருள்வாய் போற்றி
51. ஓம் சாயா தேவியின் மைந்தனே போற்றி
52. ஓம் சாவர்ணி மனுவின் சகோதரனே போற்றி
53. ஓம் சீர்பல வழங்கும் சனியே போற்றி
54. ஓம் செல்வம் யாவும் தருவாய் போற்றி
55. ஓம் சேமம் யாவும் தருவாய் போற்றி
56. ஓம் தவத்தால் நன்மை பெற்றாய் போற்றி
57. ஓம் தன்வயப்படுத்தும் தலைவ போற்றி
58. ஓம் தாமத குணத்துத் தேவே போற்றி
59. ஓம் திருமால் அன்ப போற்றி
60. ஓம் தீயெனச் சீறிச் சினப்பாய் போற்றி
61. ஓம் தீரனாய் என்றும் திகழ்வாய் போற்றி
62. ஓம் துன்பம் எல்லாம் துடைப்பாய் போற்றி
63. ஓம் துன்ப நோயச்சம் தீர்ப்பாய் போற்றி
64. ஓம் தூயனாய் நின்று துலங்குவாய் போற்றி
65. ஓம் தூய்மை பலவும் ஆக்குவாய் போற்றி
66. ஓம் நலம்தரு செயலில் நாயக போற்றி
67. ஓம் நள்ளாறு உகந்த நம்பா போற்றி
68. ஓம் நளன்கதை உரைக்க நயப்பாய் போற்றி
69. ஓம் நிலையும் பொருளின் நிலையே போற்றி
70. ஓம் நீதியின் தலைவனாய் நின்றாய் போற்றி
71. ஓம் நீலக்குவளை நேயனே போற்றி
72. ஓம் பகைமை எல்லாம் கடிவாய் போற்றி
73. ஓம் பணிவின் பக்குவம் உடையோய் போற்றி
74. ஓம் பத்திரை தன்னின் சகோதரா போற்றி
75. ஓம் பரவினர்க்குப் பண்பாய் அருள்வாய் போற்றி
76. ஓம் பாலாபிடேகம் நயப்பாய் போற்றி
77. ஓம் புகழத்தக்க பொருளே போற்றி
78. ஓம் புகழை விரும்பும் புண்ணியா போற்றி
79. ஓம் புகழை அள்ளித் தருவாய் போற்றி
80. ஓம் மருந்தின் பயனாய் நின்றாய் போற்றி
81. ஓம் மருந்து மந்திரம் ஆனாய் போற்றி
82. ஓம் மறையால் போற்றப்படுவாய் போற்றி
83. ஓம் மனத்தின் திட்பம் உடையாய் போற்றி
84. ஓம் மனத்தின் திட்பம் தருவாய் போற்றி
85. ஓம் முக்குண மூர்த்தியாய் முகிழ்த்தாய் போற்றி
86. ஓம் முறைமையின் பெருமை மதிப்பாய் போற்றி
87. ஓம் மூவகை பற்றும் முனிவாய் போற்றி
88. ஓம் மூவகை மலமும் முனிவாய் போற்றி
89. ஓம் மூவுலகும் செல் முறைமையாய் போற்றி
90. ஓம் மெய்யை விளக்கும் மேலவா போற்றி
91. ஓம் மெல்ல நடப்பாய் போற்றி
92. ஓம் மேலைத் திசையில் நின்றாய் போற்றி
93. ஓம் மேன்மைகள் யாவும் வழங்கினாய் போற்றி
94. ஓம் மோகங்கள் யாவும் தீர்ப்பாய் போற்றி
95. ஓம் வச்சிரப் படையை வரித்தோய் போற்றி
96. ஓம் வரத அபயம் அளிப்பாய் போற்றி
97. ஓம் வன்னி இலை உகந்தாய் போற்றி
98. ஓம் விண்மீன் பாதையை விரும்புவாய் போற்றி
99. ஓம் விதியின் வழுவாப் பதியே போற்றி
100. ஓம் விருப்பம் தமக்கென வேண்டாய் போற்றி
101. ஓம் வில்லைக் கையில் உடையாய் போற்றி
102. ஓம் வில்லின் வடிவம் ஆனாய் போற்றி
103. ஓம் விழாவை என்றும் விழைவாய் போற்றி
104. ஓம் வீரம் பலவும் கொண்டாய் போற்றி
105. ஓம் வெற்றி பலவும் கொண்டாய் போற்றி
106. ஓம் வேண்டுவ எல்லாம் அறிவாய் போற்றி
107. ஓம் வேண்டுவ எல்லாம் அளிப்பாய் போற்றி
108. ஓம் வையம் வாழ்விப்பாய் போற்றி போற்றி.

***

# வினாவும் விளக்கமும்

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A.D.Lit. Phd.

*வினா 19 :- ஆடிக் கிருத்திகை மற்றும் தைக் கிருத்திகை ஆகிய இரண்டு மட்டும் ஏற்றம் பெறுவது ஏன்?*

*விளக்கம் :* இருபத்தேழு நாட்களுக்கு ஒரு முறை என்ற கணக்கில் மாதமொரு கிருத்திகை வரும். ஒருசில மாதங்களில் இரண்டு கிருத்திகை வருவதுண்டு. ஓர் ஆண்டில் பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று கிருத்திகைகள் வரும்.

அவற்றுள் மூன்று முக்கியமானவை. முருகனுக்கே உகந்த கார்த்திகை மாதத்தில் வருவது. அது ''பெரிய கார்த்திகை'' என்ற பெயரில் விளக்கேற்றும் தீபத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மற்றொன்று உத்தராயணத்தின் தொடக்கமாகிய தைத்திங்களில் வரும் தைக்கிருத்திகை.

மூன்றாவது தட்சிணாயனத்தில் முதல் மாதத்தில் வரும் ஆடிக் கிருத்திகை.

தமிழர்களில் பெரும் பகுதியினர் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். அவர்கள் விதையிடும் மாதம் ஆடி மாதம் என்று கூறத்தேவையில்லை. அதுபோல் அறுவடை செய்து, அதன் பயனை அனுபவிக்கத் தொடங்கும் மகிழ்ச்சிகரமான மாதம் ''தை'' ஆகும்.

## கடி உண் கடவுள்

பழங்காலத் தமிழர்கள் முதன் முதல் அறுவடை செய்த தானியக்கதிர்களை முருகன் சன்னிதியில் படைத்து நன்றிப் பெருக்குடன் வழிபடுவார்கள். ஆதலால் முருகனுக்கு ''கடி உண் கடவுள்'' என்ற சிறப்புப் பெயர் இருந்ததென இலக்கியங்கள் கூறுகின்றன. அறுவடை செய்த புதிய தானியக் கதிர்களையே ''கடி'' என்று குறிப்பிட்டனர். தற்காலத்தில் ''கடி'' என்றால் 'அறுவடை ஜோக்' என்று பொருளாகி விட்டது.

மண்ணை நம்பி விதைக்கத் தொடங்கும் மக்கள் ஆறுமுகனின் பன்னிரு கண்ணையும் நம்பி தமது பணியை மேற்கொள்கின்றனர். அந்த அசையாத நம்பிக்கையின் வெளிப்பாடே 'ஆடிக்கிருத்திகை' விழா. அடுத்து வரும் பருவத்தில் நீர்வளம் நிறைந்து, அமோக விளைச்சலைப் பெற்றிட ஆடிக் கிருத்திகையில் அவனை வழிபடுகின்றனர்.

விரதமிருந்து வீட்டில் அனுஷ்டிப்பதுடன் விழா எடுத்துத் திருக்கோயில்களிலும் வழிபடுகின்றனர். சிவன் கோயில்களில் இருக்கும் முருகன் சன்னிதிகளிலும், தனியான முருகன் கோயில்களிலும் ஆடிக் கிருத்திகைக் கொண்டாடப்படுகிறது.

எனினும், பழநி, திருத்தணி, திருப்போரூர், வள்ளிமலை, சென்னை கந்த கோட்டம் போன்ற திருத்தலங்களில் ஆடிக்கிருத்திகை சிறப்பாக நடைபெறுகிறது.

இலங்கையில் கதிர்காமம், நல்லூர் போன்ற இடங்களிலும், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் உள்ள தலங்களிலும், ஆடிக் கிருத்திகை கொண்டாடப்படுகிறது.

*வினா 20 : முருகன் கோயில்களில் 'காவடி' எடுப்பதன் ஐதீகம் என்ன?*

*விளக்கம் :* அக்காலத்தமிழர்கள் கண்டுபிடித்த இயந்திர லாபம் (மெகானிகல் அட்வாண்டேஜ்) அளிக்கும் எளிய கருவிதான் காவடி.

மூங்கில் தண்டின் இருமுனைகளிலும் கனமான பொருட்களைச் சுமந்து வர உதவும் கருவிதான் காவடி. இருபுறங்களிலும் சமமான பாரத்தை ஏற்றி, தோளில் சுமந்து வரும் பொழுது அதிக எடையை எளிதில் தூக்க இயலும். இன்றும் கிராமப்புறங்களில் பதநீர் வியாபாரம் செய்வோர் காவடி முறையில் பானைகளைச் சுமப்பதைக் காணலாம்.

## இடும்பன் எடுத்த காவடி

இடும்பன் என்ற வீரன் சூரபதுமனுக்குப் போர்ப் பயிற்சியளிக்கும் ஆசிரியனாகத் திகழ்ந்தான். சூரன் ஆணவத்தால் சிவகுமாரனையே எதிர்த்தான். சூரனுக்கு

அறிவுரை கூறி அவனைத் திருத்த முயன்றான் இடும்பன். சூரன் அதனைக் கேட்கவில்லை. அதனால் மனம் நொந்த இடும்பன் அகத்தியரிடம் வந்து ஆறுதல் பெற்றான். அவருக்குப் பணிவிடைகள் செய்து வந்தான்.

முருகனின் கந்தகிரிக்கு அருகில் சிவசக்தி அம்சமாக, சிவகிரி, சக்திகிரி என இருமலைகள் இருந்தன. அகத்தியர் அவற்றைக்கண்டு வழிபட விரும்பினார். அவற்றைத் தமது இருப்பிடத்துக்கு எடுத்து வந்திட இடும்பனை அனுப்பினார். அகத்தியர் ஆணையை ஏற்றுச் சென்றான் இடும்பன். இரண்டு மலைகளையும் காவடி அமைப்பில் கட்டிச் சுமந்து வந்தான்.

வழியில் சற்றுத் திசை தெரியாமல் தடுமாறினான். அப்போது ஒரு குதிரை வீரன் அவனுக்கு வழிகாட்டினான். திரு 'ஆவினன்'குடி என்ற பழநிக்கு வந்தவுடன் இடும்பனைச் சிறிது இளைப்பாறிச் செல்லுமாறு கூறினான் குதிரை வீரன். இடும்பன் மலைகளைக் கீழே வைத்து இளைப்பாறினான். மீண்டும் அவற்றைத் தூக்க முற்பட்டான். ஆனால் அவை அசைக்க முடியாதபடி வேரூன்றி விட்டன! குதிரை வீரனைக் காணவில்லை! மலையின் உச்சியில் நின்று ஒரு சிறுவன் சிரித்தான். சினங்கொண்ட இடும்பன் சிறுவனுடன் போரிட முற்பட்டான். ஆனால் சிறுவனின் பார்வையே அவனைக் கீழே சாய்த்தது!

அந்தச் சிறுவன் முருகன்தான் என அறிந்த அகத்தியர் இடும்பனைப் பிழைத்தெழச் செய்யும்படி வேண்டினார். இடும்பன் மனைவி இடும்பியும் அவ்வாறே வேண்டினாள்.

முருகனும் மகிழ்ந்து இடும்பனை இனிதே பிழைத்தெழ செய்தருளினான். இடும்பனின் குருபக்தியையும் வீரத்தையும் பாராட்டினான். அத்துடன் 'காவடி' எடுத்தல் தனக்கு உகந்த பிரார்த்தனையாக அமையும் என்றும் அருளினான். அன்று முதல் முருகனுக்குக் காவடி எடுக்கும் மரபு ஏற்பட்டது.

இலங்கை யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள நல்லூர் ஆறுமுகன் கோயில் மிகவும் பிரபலமானது. இத்திருக்கோயிலுக்கு அருகில் பெரிய ஏரி ஒன்று உள்ளது. சிங்கை பரராச சேகரன் என்பவனால் இந்த ஏரி வெட்டப்பட்டது. இதில் முதன் முதலாக யமுனை நதி நீரைக் காவடியில் எடுத்து வந்து சேர்த்தான். அதனால் அந்த ஏரியை 'யமுனா ஏரி' என்று அழைத்தனர். இப்போது இது 'யமுனாரி' என்று வழங்கி வருகிறது.

ஆடிக் கிருத்திகை நாளில் ஆயிரக்கணக்கில் காவடிகள் வருகின்றன. அபிஷேகப் பொருட்களான பால், பன்னீர், இளநீர், தேன் முதலியவற்றைக் காவடியில் சுமந்து வந்து முருகனுக்குச் சமர்ப்பிக்கின்றனர். காவடிகளை ஆடியும் பாடியும் மகிழ்ச்சியுடன் எடுத்து வருகின்றனர்.

**அலகு காவடி என்னும் 'அக்கு பங்சர்'**

உடலில் பல பகுதிகளில் சிறிய வேல் அல்லது அலகுகளால் குத்திக் கொண்டு தாங்கி வரும் காவடியை, 'வேல் காவடி' அல்லது 'அலகு காவடி' என்று கூறுவர். உடலில் துளையிட்டு நோய்களைக் குணமாக்கும் 'அக்குபங்சர்' என்ற மருத்துவ மகத்துவமே, இதில் அடங்கியுள்ளது.

***வினா 21 : ''மகாவாக்கியங்கள்'' என்றால் என்ன?***

**விளக்கம் :** எல்லா காலத்துக்கும் எல்லோருக்கும் பொதுவான இறைநெறிச் சொற்றொடர்கள் உள்ளன. அவற்றைப் பெருமை மிகு அல்லது சிறப்புமிகு சொற்றொடர்கள் என்ற பொருளில் ''மகா வாக்கியங்கள்'' என்று புகழ்ந்தனர்.

'தத்துவம்' என்ற சொல்லே தன்னுள் ஒரு பெரும் தத்துவத்தை அடக்கியுள்ளது. அனைத்தையும் கடந்து அப்பாலுக்கு அப்பாலாய் நிற்கும் பரம் பொருளை 'அது' (தத்) என்றனர். ''அது எங்கோ இருந்தாலும் உன்னுள்ளும் நீக்கமற நிறைந்துள்ளது. அது உன்னுள் இருப்பதால்தான் நீ உயிருள்ளவனாய் இயங்குகிறாய். ஆகவே அதுவும் நீயும் ஒன்றே'' என்று உணர்த்தும் சொற்றொடர்தான் 'தத்வமஸி' என்பது. அதாவது தத் - அது, த்வம் - நீயாக, அஸி - இருக்கிறது என்பது பொருள்.

உருவத்துடனும், குணங்களுடனும் காட்சி தரும் தெய்வத்தை 'ஸகுண ப்ரம்மம்' என்பர். நாம, ரூபங்களைக் கடந்து நின்ற நிலையில் அதுவே 'நிர்குணப் பிரம்மம்' எனப்படும். 'ப்ரம்மம்' என்றால் பரம்பொருள் என்பதே பொருள்.

''அப்பரம்பொருள் என்னுள்ளும் நிறைந்திருக்கிறது. ஆகவே நானே பரம்பொருள்'' என்று பாவிக்கும் ஆன்மீக நிலையை ''அஹம் ப்ரம்மாஸ்மி'' என்ற மஹா வாக்கியம் குறிப்பிடுகிறது.

''சிவனும் சீவனும் வேறல்ல. ஆகவே நானே சிவன்'' எனக் கருதியிருப்பது 'சிவோஹம்' பாவனை எனப்படும். எனவே 'சிவோஹம்' என்பதும் ஒரு மகாவாக்கியம்.



திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் 9.7.2000 அன்று ''பன்னிரு திருமுறைக் கருத்தரங்கம்'' இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி இணை ஆணையாளர் திருமிகு இளங்கோ அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன், முனைவர் மா. வண்ணமுத்து, பைம்பொழில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், திருக்கோயில் ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், கலைமாமணி அருளரசு மாசிலாமணி உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பலர் இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு வே. துரைசாமி அவர்களும், அறங்காவலர் குழுத் தலைவர் திருமிகு நம்பி அவர்களும் கருத்தரங்கம் சிறப்பாக நடப்பதற்கு ஆவன செய்திருந்தனர்.

அதே பாவனை கௌமார (முருக பக்தி) நெறியில் ''சுப்ரமண்யோஹம்'' என்ற மகா வாக்கியத்தால் குறிப்பிடப்படும்.

''அனைத்து நூல்களின் மாபெரும் முடிவான அப்புருஷனை நான் அறிகிறேன்'' (வேதாஹம் ஏதம் புருஷம் மஹாந்தம்) என்பது ஒரு மகா வாக்கியம். இது வேதத்தில் உள்ளது.

வேதமே இராமாயணம் ஆயிற்று. அவ்வேதம் குறிப்பிட்ட பரம்பொருளே இராமன். ''சத்திய பராக்கிரமனான இந்த இராமனை நான் அறிவேன்''. (அஹம் வேத்மி மகாத்மானாம் ராமம் ஸத்யபராக்ரமம்) என்றார் வால்மீகி. இந்த ஸ்லோகம் 'வேதாஹேமேதம்' என்ற வேத வாக்கியத்தின் மற்றொரு படியே என்று பெரியவாச்சான் பிள்ளை விளக்கி நிறுவியுள்ளார்.

எல்லா மொழிகளிலும் 'மகா வாக்கியங்கள்' உண்டு. தமிழில் நிறைய உண்டு.

அப்பர் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சியை விளக்கும் ''கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'' என்ற பாடலில் 'கண்டறியாதன கண்டேன்' என்பது மகாவாக்கியமே.

அதுவே அபிராமி அந்தாதியில் ''அறிந்தேன் எவரும் அறியா மறையை'' என்று வேறுவடிவில் உள்ளது.

''சும்மா இரு. சொல்லற'' என்பது அருணகிரி நாதருக்கு ஆறுமுகன் உபதேசித்த மகாவாக்கியம்.

''நீ ஒருவனே தேறு பொருள்'' என்கிறது சுவாமி மலை நவரத்தினமாலை.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்பது பத்தாந் திருமுறையில் திருமூலர் அளித்த மகாவாக்கியம்.

'அது' என்று மகாவாக்கியங்கள் குறிப்பிட்ட இறைவனை 'இவன்' என்று அண்மையில் சுட்டிக் காட்டினார் சம்பந்தர்.

இறையுண்மையை உணர்த்தும் பணியே ஞானாசிரியன் கடமை, அதனைச் செவ்வனே செய்தார் திருஞானசம்பந்தர்.


''பெம்மான் இவன்'' என்று அறுதியிட்டு உறுதிபட உரைத்த அவர்தம் சொற்றொடர் ''மகாவாக்கியங்களின் சிகரம்'' எனலாம்.

★ ★ ★





திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் 9.7.2000 அன்று ''பன்னிரு திருமுறைக் கருத்தரங்கம்'' இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருநெல்வேலி இணை ஆணையாளர் திருமிகு இளங்கோ அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன், முனைவர் மா. வண்ணமுத்து, பைம்பொழில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், திருக்கோயில் ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், கலைமாமணி அருளரசு மாசிலாமணி உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பலர் இக்கருத்தரங்கில் பங்கேற்றுச் சிறப்பித்தனர். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு வே. துரைசாமி அவர்களும், அறங்காவலர் குழுத் தலைவர் திருமிகு நம்பி அவர்களும் கருத்தரங்கம் சிறப்பாக நடப்பதற்கு ஆவன செய்திருந்தனர்.




பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 5.7.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை அமைச்சர் திருமிகு பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திருமிகு இ. பெரியசாமி அவர்கள், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் [பி] லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.